# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (கொ.நு.வி.சு) (2006/07=100) ஏற்படும் மாற்றத்தினால் அளவிடப்படும் பணவீக்கம் 2014இல் தொடர்ந்தும் ஒற்றை இலக்க மட்டங்களில் விளங்கியது.** 2014இன் இறுதியில் ஆண்டுக்காண்டு மற்றும் ஆண்டுச்சராசரி பணவீக்கம் என்பன முறையே 2.1 சதவீதம் மற்றும் 3.3 சதவீதங்களைப் பதிவு செய்தன. முன்மதியான நாணய முகாமைத்துவம், பன்னாட்டு பொருட்கள் விலைகளின் மெதுவடைவு, சார்புரீதியில் நிலையான செலாவணி வீதம், நிரம்பல் பக்க குழப்பங்களை நிவர்த்திக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட இறைக்கொள்கை வழிமுறைகள் மற்றும் நன்கு முகாமைசெய்யப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் இணைந்த தாக்கத்தினால் பணவீக்க அழுத்தம் 2014இல் குறைவாக விளங்கியது. மேலும், ஆண்டின் ஆரம்ப மாதங்களில் உடன் உணவுப் பொருட்களின் உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் மின், நீர், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவ பெற்றோலிய வாயு ஆகியவற்றின் நிர்வகிக்கப்பட்ட விலைகளின் மீதான கீழ்நோக்கிய திருத்தங்கள் என்பனவும் பொது விலை மட்டத்தை கீழ்நோக்கி கொண்டுவரவும் பணவீக்கத்தை குறைந்த மட்டங்களில் பேணுவதற்கும் பங்களிப்புச் செய்தன. இதேவேளை பணவீக்கத்தின் போக்கை நீண்ட கால அடிப்படையில் வெளிப்படுத்தும் மையப் பணவீக்கம் குறைந்த தளம்பலுடன் குறைந்த மட்டங்களில் விளங்கியது. ஆண்டுகாலப்பகுதியில் நிலவிய குறைந்தமட்ட பணவீக்கத்தினாலும் பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் உதவப்பட்டு, அனைத்து துறைகளிலுமுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் அதிகரித்தன. 2014இல் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்துடன் கூடியவகையில் பொருளாதாரத்தின் தொழிற்படையை உள்வாங்கும் இயலுமை பலப்படுத்தப்பட்டதுடன் புதிய தொழில் வாய்ப்புக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் தொழிற்படையில் ஏற்பட்ட விரிவாக்கத்தை விட அதிகளவில் விரிவடைந்தது. இதன் விளைவாக ஒட்டுமொத்த தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தது. எனினும் தொழில் புரியும் வயதுடையோரின் குடித்தொகை அதிகரிப்பு தொழிற்படையில் ஏற்பட்ட அதிகரிப்பை விட அதிகமாகக் காணப்பட்டதன் விளைவாக தொழிற்படை பங்கேற்பு வீதம் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரில் வேளாண்மைத்துறையின் பங்கு வீழ்ச்சியடைந்ததுடன் கைத்தொழில் மற்றும் பணிகள் துறையின் பங்குகள் 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் அதிகரித்தன. பொருளாதாரத்தில் தொழில்நிலை அதிகரிப்புக்கு முதன்மைப் பங்களிப்பாளராக பணிகள் துறை தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்தியது. அரச துறையிலான தொழில்நிலை 2014இல் அதிகரித்தது. மேலும் உள்நாட்டில் தொழில்நிலை வாய்ப்புக்கள் இருந்த போதிலும் கவர்ச்சிகரமான ஊதியத்தின் காரணமாக வெளிநாட்டுத் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்து உள்நாட்டுச் சந்தையில் தொழிற்படையின் பற்றாக்குறையை விளைவித்தது. வெளிநாட்டுத் தொழில்நிலைக்கான வெளிச்செல்லல்களின் மொத்த எண்ணிக்கை ஆண்களின் புலம்பெயர்வின் அதிகரிப்பால் மட்டுமே ஏற்பட்டு பணிப்பெண்களின் வெளிச் செல்லல்களைக் குறைப்பதற்கு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் வினைத்திறனைப் பிரதிபலித்திருந்தது. தொழில்சார், மத்திய தரம், எழுதுவினைஞர் தொடர்பான வேலைகள் மற்றும் ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் வகைகளின் கீழான வெளிச்செல்லல்கள் இவ்வாண்டில் அதிகரித்தன. இதேவேளை பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் தொழிலாளர் உற்பத்தித்திறன் மட்டங்கள் தொடர்ந்தும் அதிகரித்தன.


## 4.2 விலைகள்

### விலை அசைவுகளும் பங்களிப்புக் காரணிகளும்

### கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு)

**இலங்கையில் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை அளவிடும் அலுவல்சார் சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2006/07=100) 2014இல் மிதமான வீதத்தில் அதிகரித்தது.** அதன்படி ஆண்டுச்சராசரி முதன்மைப் பணவீக்கம் 2014 சனவரியில் 6.5 சதவீதத்திலிருந்து தொடர்ச்சியாக மெதுவடைந்து 2014 திசெம்பரின் 3.3 சதவீதத்தை அடைந்தது. ஆண்டுக்காண்டு பணவீக்கம் பொதுவாகக் குறைவடைந்த போதிலும் ஆண்டுகாலப்பகுதியில் கலப்பான போக்கினை வெளிப்படுத்தியது. இது சனவரியிலிருந்து பெப்புருவரிக்கு வீழ்ச்சியடைந்ததுடன் மாச்சில் அதே மட்டத்தில் நிலைபெற்றிருந்து பருவகால கேள்வி மற்றும் தளத்தின் தாக்கத்தால் 2014 ஏப்பிறலில் மீண்டும் அதிகரித்தது. 2013இன் தொடர்ச்சியான காலப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்த தளத்தின் காரணமாக ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2014 மே மற்றும் யூனில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளை வெளிப்படுத்தியது. முக்கியமாக உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகளால் ஏற்பட்ட குறைந்த வழங்கலின் விளைவாக வேளாண்மை பொருட்களின் விலைகள் அதிகரித்தன. இதன் விளைவாக ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2014 யூலையில் அதிகரித்தது. எனினும் சந்தையில் சிறுபோக அறுவடையில் கிடைக்கும் தன்மை மற்றும் எரிபொருள் மற்றும் மின் தீர்வையின் மீதான திருத்தத்தின் பின்னரான மிதமான விலைகளின் காரணமாக பணவீக்கம் ஒத்தோபரில் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் இவ்வீழ்ச்சியடையும் போக்கு, நீர்க்கட்டண பெறுமதியின் குறைப்பு மற்றும் எரிபொருள் விலைகளின் மேலதிகக்குறைப்புடன் மேலும் வீழ்ச்சியடைந்து ஆண்டின் மிகக் குறைந்த பணவீக்கமான

வரைபடம் 4.1 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2006/07=100)




1.5 சதவீதத்தை நவம்பரில் பதிவு செய்தது. பாரிய மழை வீழ்ச்சியின் காரணமாக பயிர்களில் ஏற்பட்ட சேதம் மற்றும் விநியோக வழிகளில் ஏற்பட்ட குழப்பங்கள் என்பவற்றால் 2014 திசம்பரில் பணவீக்கம் மீண்டும் 2.1 சதவீதத்துக்கு அதிகரித்தது.

### உணவு வகைகளில் விலைகளின் அசைவுகள்

**ஆண்டுகாலப்பகுதியில் ஆண்டுக்காண்டு உணவுப் பணவீக்கம் ஒரு ஒட்டுமொத்த அதிகரிப்பு போக்கை காட்டியிருந்தது.** உணவு பணவீக்கம் சனவரியில் 1.3 சதவீதமாக இருந்ததுடன் ஆண்டின் முதல் காலாண்டில் குறைந்த மட்டங்களிலேயே விளங்கியது. எனினும், அதன் பின்னர் இது குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து கலப்பான போக்குகளை வெளிக்காட்டி 2014 திசம்பரில் 7.0 சதவீதத்தை அடைந்தது. ஆண்டுச் சராசரி உணவுப் பணவீக்கம் பொதுவாக வீழ்ச்சியடையும் போக்கை தொடர்ந்திருந்ததுடன் 2014 சனவரியில் பதிவு செய்த 7.1 சதவீதத்திலிருந்து திசம்பரில் 3.8 சதவீதத்தை அடைந்தது.

**உணவு வகையினுள் முக்கிய பொருளான அரிசியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2013இல் காணப்பட்டதைக் காட்டிலும் 2014இல் உயர்வாக விளங்கியது.** இவ்விலை அதிகரிப்பு பெரும்போக மற்றும் சிறுபோகம் ஆகிய இரு பருவகாலங்களிலும் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகளால் நெல் உற்பத்தி இரு பருவகாலங்களிலும் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஏற்பட்டது. முன்னைய பருவகாலங்களில் பெறப்பட்ட அறுவடைகளும் சாதாரண மட்டங்களில் காணப்படாமையால் அரிசியின் இருப்புக்களில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக இது மேலும் அதிகரித்தது. மேலும் அரிசியை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு இடையில் நிலவிய அரிசியின் கொள்வனவுக்கான போட்டித்தன்மையும் சில விலை அழுத்தங்களை ஏற்படுத்தின. உள்நாட்டு சந்தையில் காணப்பட்ட நிரம்பலின் தடைகளை நிவர்த்தி செய்வதற்கும் விலை அழுத்தத்தை குறிப்பிட்ட அளவுக்கு இலகுவாக்கும் பொருட்டும் இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளின் மீதான நடைமுறையிலிருந்த தீர்வை, ஏற்கனவே இருந்த அனைத்துத் தீர்வைகளுக்கும் பதிலாக சிறப்புப் பண்டத் தீர்வையை அறிமுகப்படுத்துவதன் மூலம் 2014 ஏப்பிறல் 9இலிருந்து கிலோ கிராமிற்கு ரூபா 5இற்கு குறைக்கப்பட்டதுடன் 2014 செத்தெம்பரில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ரூ.1ஆக மேலும் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக அதிகரித்த அரிசி இறக்குமதிகள் சந்தையில் அரிசியின் நிரம்பல் பற்றாக்குறையை குறைக்க உதவின. மேலும் சந்தை விலைக்கு மிகவும் குறைவான நிலையில் இருந்த உச்ச விலையும் 2014 ஏப்பிறல் 9இலிருந்து மேல்நோக்கி திருத்தப்பட்டது. மேலும் 2014 ஏப்பிறல் 27இலிருந்து லக் சதோச நிலையங்களில்

**அட்டவணை 4.1 விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்**

| சுட்டெண் | சுட்டெண் (ஆண்டு இறுதி) | | ஆண்டுக்காண்டு சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 (அ) | திசெ 2013/ திசெ 2012 | திசெ 2014/ திசெ. 2013 (அ) | 2013/2012 | 2014/2013 (அ) |
| கொ.நு.வி.சு (2006/07=100) | 176.5 | 180.2 | 4.7 | 2.1 | 6.9 | 3.3 |
| மொ.உ.உ சுருக்கி (2002=100) | 265.6 | 279.0 | - | - | 6.7 | 5.1 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விற்பனை விலைகள் குறைக்கப்பட்டன. இவ்வழிமுறைகள் அரிசியின் விலையை ஓரளவுக்கு மிதமாக்குவதற்கு உதவின.

**முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் மரக்கறியின் நிறையேற்றப்பட்ட சராசரி விலைகள் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன.** நிரம்பல் பக்க நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக 2014இன் ஆரம்ப மாதங்களில் அநேகமாக அனைத்து மரக்கறி வகைகளின் விலைகளும் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்பட்டன. எனினும், நலிவடைந்த நிரம்பல் நிலைமைகளின் காரணமாக விலைகள் பொதுவாக மேயிலிருந்து மேல்நோக்கி நகர ஆரம்பித்ததுடன் ஒட்டுமொத்த பணவீக்கத்தில் சில மேல்நோக்கிய அழுத்தத்தையும் ஏற்படுத்தியது. இருப்பினும் சிறுபோக அறுவடையானது சந்தையை அடைந்ததன் காரணமாக 2014 ஓகத்திலிருந்து மரக்கறி விலைகள் வீழ்ச்சியடைய ஆரம்பித்தன. எனினும் பருவகால காரணிகளினதும் பாதகமான காலநிலை நிலைமைகளினதும் இணைந்த தாக்கத்தால் விலைகள் ஒத்தோபரிலிருந்து மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்தன.

**உடன்மீன் மற்றும் கடலுணவின் நிறையேற்றப்பட்ட சராசரி விலை 2013உடன் ஒப்பிடுகையில் 2014இல் 2.5 சதவீதத்தால் அதிகரித்தது.** வழமையான பருவகால போக்கை பின்பற்றும் வகையில் பெரிய மற்றும் சிறிய வகை மீன்கள் இரண்டினதும் விலைகள் 2014 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரை குறைவாக விளங்கியது. எனினும் கரையோர பிரதேசங்களில் நிலவிய பாதகமான பருவகால காலநிலை காரணிகளின் காரணமாக அதன் பின்னர் உடன்மீன் விலைகள் படிப்படியாக அதிகரித்தது. இடைப்பட்ட மொன்சூன் மீன் பிடிகாலம் காரணமாக முன்னேற்றமடைந்த நிரம்பல் நிலைமைகளால் விலைகள் ஒத்தோபர் மற்றும் நவம்பரில் வீழ்ச்சியடைந்தது. எனினும் பருவகால கேள்வியின் காரணமாக விலைகள் 2014 திசம்பரில் அதிகரித்தன. அதேவேளை முட்டைக்கான கேள்வி குறைவாகக் காணப்பட்டதன் காரணமாக முட்டைகளின் விலை 2014இல் 9.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

**2014இல் தேங்காய் உற்பத்தி அதிகரித்த போதிலும் கைத்தொழில் ரீதியாக தேங்காய் பதனிடும் கைத்தொழில்களில் தேங்காய்க்கான கேள்வி அதிகமாகக் காணப்பட்டமையால் 2014 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரையில் தேங்காயின் விலை உயர்வாகக் காணப்பட்டது.** எனினும் அதன் பின்னர் விலைகள் படிப்படியாகக் குறைவடையும் போக்கை தொடர்ந்ததுடன் ஆண்டின் இறுதிப்பகுதியில் அதிகரித்தது. அதேவேளை 2014 யூலை வரையான காலப்பகுதி வரைக்கும் 2013 திசம்பரில் காணப்பட்ட விலை மட்டத்தில் காணப்பட்ட தேங்காய் எண்ணெயின் விலை அதன் பின்னர் வீழ்ச்சியடைந்தது. இவ்விலைப் போக்குகளின் ஒட்டுமொத்த தாக்கத்தின் விளைவாக 2013உடன் ஒப்பிடுகையில் 2014இல் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலைகள் சராசரியாக முறையே 8.1 சதவீதம் மற்றும் 9.7 சதவீதத்தால் அதிகரித்தன.

**நிரம்பல் பக்க தடைகளை எதிர்நோக்கும் பொருட்டு அவ்வாறான நிலைகள் அறியப்பட்ட சந்தர்ப்பங்களிலும் சில சந்தர்ப்பங்களில் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு இறைக்கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** அதன்படி உள்நாட்டு அறுவடையின் போது இறக்குமதியை ஊக்கமிழக்கச் செய்யும் பொருட்டு உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் சிறப்புப் பண்டத்தீர்வை ஆண்டில் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. மேலும் 2014 செத்தெம்பரின் போது உருளைக்கிழங்கின் இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன்படி

**அட்டவணை 4.2 உபதுறைகளின்படி ஆண்டுச் சராசரி பணவீக்கத்திற்கான பங்களிப்பு (அ)**

| சுட்டெண் | 2013 சதவீதம் | | 2014 சதவீதம் | |
|---|---|---|---|---|
| | மாற்றம் | பங்களிப்பு | மாற்றம் | பங்களிப்பு |
| கொ.நு.வி.சு. (எல்லாப் பொருட்கள்) | 6.9 | 100.0 | 3.3 | 100.0 |
| உணவு மற்றும் வெறியமற்ற குடிபானங்கள் | 7.9 | 52.0 | 3.8 | 53.1 |
| உணவற்றவை | 6.1 | 48.0 | 2.8 | 46.9 |
| உடைகள் மற்றும் காலணி | 5.4 | 2.4 | 0.4 | 0.4 |
| குடியிருப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் | 10.7 | 30.8 | 1.1 | 7.1 |
| தளபாடம், வீட்டுப்பாவனை பொருள் மற்றும் வழமையான வீடு பேணல் | 4.0 | 1.8 | 2.3 | 2.1 |
| நலன் | 1.7 | 1.2 | 8.5 | 11.9 |
| போக்குவரத்து | 4.6 | 9.1 | 4.5 | 18.6 |
| தொடர்பூட்டல் | 0.0 | 0.0 | 4.0 | 3.0 |
| பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 4.1 | 0.8 | 2.2 | 0.9 |
| கல்வி | 0.9 | 0.5 | 0.5 | 0.5 |
| பல்வகை பொருட்கள் மற்றும் சேவைகள் | 4.2 | 1.5 | 3.2 | 2.3 |

(அ) கொ.நு.வி.சு. (2006/07=100) இன் அடிப்படையில்

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.3 இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்**

| விடயம் | அலகு | கொநுவிசு (2006/07=100) நிறை% | விலை - ரூபா | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டுச் சராசரி | | | திசெ. 2012 | திசெ. 2013 | திசெ. 2014 | ஆண்டுச் சராசரி | | ஆண்டுக்காண்டு | |
| | | | 2012 | 2013 | 2014 | | | | 2013/2012 | 2014/2013 | திசெ.2013/ திசெ.2012 | திசெ.2014/ திசெ.2013 |
| உள்நாட்டு அரிசி - சம்பா | 1கி.கி | 1.96 | 70.15 | 72.29 | 84.14 | 74.06 | 72.21 | 92.77 | 3.1 | 16.4 | -2.5 | 28.5 |
| அரிசி - பச்சை (சிவப்பு) | 1கி.கி | 0.85 | 57.08 | 59.87 | 75.28 | 60.58 | 60.78 | 91.90 | 4.9 | 25.7 | 0.3 | 51.2 |
| அரிசி - பச்சை (வெள்ளை) | 1கி.கி | 0.60 | 56.26 | 59.28 | 71.75 | 60.46 | 60.44 | 78.19 | 5.4 | 21.0 | 0.0 | 29.4 |
| அரிசி - நாடு | 1கி.கி | 0.35 | 59.67 | 61.59 | 78.37 | 62.73 | 63.31 | 87.56 | 3.2 | 27.3 | 0.9 | 38.3 |
| தேங்காய் (நடுத்தரம்) | காய் | 1.84 | 34.76 | 43.44 | 45.63 | 38.22 | 47.64 | 47.04 | 25.0 | 5.0 | 24.7 | -1.3 |
| மீன் - கெலவல்ல | 1கி.கி | 1.11 | 694.14 | 697.33 | 741.22 | 718.18 | 694.60 | 744.35 | 0.5 | 6.3 | -3.3 | 7.2 |
| அவரை | 1கி.கி | 0.43 | 157.60 | 166.00 | 163.87 | 160.65 | 166.16 | 207.49 | 5.3 | -1.3 | 3.4 | 24.9 |
| கத்தரி | 1கி.கி | 0.19 | 99.25 | 107.73 | 110.34 | 113.28 | 92.58 | 137.20 | 8.5 | 2.4 | -18.3 | 48.2 |
| முட்டை | ஒவ்வொன்றும் | 0.37 | 11.29 | 14.06 | 12.75 | 14.49 | 14.12 | 12.78 | 24.5 | -9.3 | -2.5 | -9.5 |
| இறக்குமதிகள் சீனி | 1கி.கி | 1.12 | 101.04 | 100.95 | 101.71 | 105.50 | 102.41 | 100.37 | -0.1 | 0.7 | -2.9 | -9.5 |
| பால்மா - அங்கர் | 400கி | 3.21 | 302.35 | 325.00 | 379.13 | 325.00 | 325.00 | 386.00 | 7.5 | 16.7 | 0.0 | 18.8 |
| சிவப்பு - பருப்பு | 1கி.கி | 0.73 | 145.07 | 156.34 | 162.80 | 146.18 | 157.05 | 170.34 | 7.8 | 4.1 | 7.4 | 8.5 |
| கோதுமை மா | 1கி.கி | 0.20 | 90.92 | 98.13 | 97.80 | 98.46 | 97.93 | 97.84 | 7.9 | -0.3 | -0.5 | -0.1 |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2013உடன் ஒப்பிடுகையில் 2014இல் உருளைக்கிழங்கின் சராசரி விலை 11.3 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் என்பனவற்றின் சராசரி விலைகள் முறையே 19.9 மற்றும் 35.4 சதவீத வீழ்ச்சிகளை தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்தன.

**நாட்டின் உணவுப் பாதுகாப்பை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளால் உடன் உணவின் நிரம்பலில் பெறப்பட்ட முன்னேற்றம் மற்றும் உற்பத்தி மற்றும் விநியோகத் தொழிற்பாட்டுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்துக் கொண்டமை என்பன கடந்த சில ஆண்டுகளாக உடனுணவின் விலைகளின் வீழ்ச்சியை மேலும் ஊக்கப்படுத்தின.** எனினும் விநியோக வலையமைப்புக்களையும் களஞ்சியப்படுத்தும் வசதிகளையும் முன்னேற்ற எடுக்கப்படும் வழிமுறைகள் உற்பத்தியாளரினதும் நுகர்வோரினதும் மட்டங்களில் காணப்படும் விலை வேறுபாடுகளை குறைப்பதற்கு மேலும் பலமாக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அதிக விளைச்சலை தரும் வகைகளின் அறிமுகமும் உடன் உணவுப் பொருட்களின் விலையை மேலும் குறைக்க உதவும்.

**2014இல் பெரும்பாலான இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் உள்நாட்டு விலைத்திருத்தங்கள் பன்னாட்டுச் சந்தையில் அப்பொருட்களின் விலைப் போக்குகளுடனேயே இணைந்து நகர்ந்தன.** இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 4.1 சதவீதம் மற்றும் 0.7 சதவீதத்தால் அதிகரித்தன. இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலை 2014 பெப்புருவரி 1இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 400 கிராம் பொதிக்கு ரூ.61இனாலும் 1 கிலோ கிராம் பொதிக்கு ரூ.152இனாலும் அதிகரிக்கப்பட்டது. இருப்பினும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால்மாவின் நுகர்வினை ஊக்கப்படுத்தும் விதத்தில் 2014 ஒத்தோபர் வரவு செலவுத் திட்டத்தின் போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால்மாவின் விலை கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.100 ஆல் குறைக்கப்பட்டது. மேலும் இக்காலப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் நிலையான செலாவணி வீதமானது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலையைக் குறைவாக பேண உதவியது.

## உணவல்லா வகைகளில் விலைகளின் அசைவுகள்

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் 58.97 சதவீதத்துக்கு வகை கூறுகின்ற உணவல்லா வகையினது பணவீக்கம் பொதுவாக வீழ்ச்சியடையும் போக்கை ஆண்டு முழுவதிலும் காட்டியது.** சனவரியிலிருந்து ஏப்பிறல் வரை உணவுப் பணவீக்கத்தை விட உணவல்லா வகை பணவீக்கம் அதிகமாகக் காணப்பட்டதுடன் அக்காலப்பகுதியில் ஒட்டுமொத்த ஆண்டுக்காண்டு பணவீக்கத்துக்கு பிரதான பங்களிப்புக் காரணியாக விளங்கியது. அதன் பின்னர் ஒட்டுமொத்த பணவீக்கத்துக்கான இதன் பங்களிப்பு சடுதியாக குறைவடைந்தது. 2014 ஒத்தோபரிலிருந்து திசம்பர் வரையில் உணவல்லா வகையானது எதிர்க்கணிய ரீதியில் பங்களிப்புச் செய்து உணவு வகையில் ஏற்பட்ட மேல்நோக்கிய அழுத்தத்தை ஓரளவுக்கு எதிரீடு செய்வதற்கு உதவியமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக உணவல்லா வகையின் ஆண்டுக்காண்டு பணவீக்கம் 2014 சனவரியின் 7.1 சதவீதத்திலிருந்து

2014 திசம்பரின் -2.0 சதவீதத்துக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. உணவல்லா வகையின் ஆண்டுச் சராசரி பணவீக்கமும் சனவரியில் 5.9 சதவீதத்திலிருந்து 2014 திசம்பரின் 2.8 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. உணவல்லா வகையினுள் உடைகள் மற்றும் காலணி, தளபாடம் வீட்டுப் பாவனைப் பொருள் மற்றும் வழமையான வீடு பேணல், நலன், தொடர்பூட்டல், பொழுது போக்கு மற்றும் கலாசாரம், கல்வி மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய துணை வகைகளின் விலைகள் ஆண்டுகாலப்பகுதியில் மிதமாக அதிகரித்ததோடு பணவீக்கத்தின் மீது மிகச் சிறிய அழுத்தத்தையே ஏற்படுத்தியது.

**நிர்வகிக்கப்பட்ட விலைகளைக் கொண்ட உணவல்லாப் பொருட்களின் விலை 2014 ஓகத்து வரை மாற்றமின்றி விளங்கி அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்தது.** இவ்வகையின் உணவல்லா நிர்வகிக்கப்பட்ட வகைகளிலிருந்தான ஆண்டுக்காண்டு பணவீக்கத்துக்கான பங்களிப்பு 2013 ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட மின் தீர்வையின் மேல்நோக்கிய திருத்தம் காரணமாக 2014 சனவரி முதல் ஏப்பிறல் வரை குறிப்பிடத்தக்க அளவு உயர்வாகக் காணப்பட்டது. ஆண்டுக்காண்டு மாற்றத்துக்கான தொடர்பான தளம் 2014 மேயில் உயர்வாகக் காணப்பட்டதுடன் 2014 ஒத்தோபர் வரை ஒரே மட்டத்தில் விளங்கியது. அதன் விளைவாக இவ்வகைகளிலிருந்தான ஆண்டுக்காண்டு

அட்டவணை 4.4 நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்களுடனான முக்கிய விடயங்களின் சீர்திருத்தம் (2012 - 2014)

| விடயம் | | அலகு | விலை (ஆண்டு இறுதி) - ரூ. 2012 | 2013 | 2014 | சதவீத மாற்றம் 2013/2012 | 2014/2013 |
|---|---|---|---|---|---|---|---|
| டீசல் - இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | | 1 லீற்றர் | 115.00 | 121.00 | 111.00 | 5.2 | -8.3 |
| டீசல் - வரையறுக்கப்பட்ட லங்கா இந்தியன் ஒயில் கம்பனி | | 1 லீற்றர் | 121.00 | 121.00 | 111.00 | 0.0 | -8.3 |
| மண்ணெண்ணெய் | | 1 லீற்றர் | 106.00 | 106.00 | 81.00 | 0.0 | -23.6 |
| பெற்றோல் | | 1 லீற்றர் | 159.00 | 162.00 | 150.00 | 1.9 | -7.4 |
| எரிவாயு - லிட்றோ | | 12.5 கி.கி | 2,246.00 | 2,396.00 | 1,896.00 | 6.7 | -20.9 |
| எரிவாயு - லாவ்ஸ் | | 12.5 கி.கி | 2,246.00 | 2,396.00 | 1,896.00 | 6.7 | -20.9 |
| உலை எண்ணெய் (1500) | | 1 லீற்றர் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| உலை எண்ணெய் (3500) | | 1 லீற்றர் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் | தீர்வைத்தொகுதி | முதல் 30 அலகுகள் | 30.00 | 30.00 | 30.00 | 0.0 | 0.0 |
| | | 31 - 60 அலகுகள் | 60.00 | 60.00 | 60.00 | 0.0 | 0.0 |
| | | 61 - 90 அலகுகள் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| | | 91 - 180 அலகுகள் | 315.00 | 315.00 | 480.00 | 0.0 | 52.4 |
| | | 180ற்கும் மேற்பட்ட அலகுகள் | 315.00 | 420.00 | 540.00 | 33.3 | 28.6 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் (அ) | தீர்வைத்தொகுதி | | | | | | |
| | < 60 அலகுகள் | முதல் 30 அலகுகள் | 3.00 | 3.00 | 2.50 | 0.0 | -16.7 |
| | | 31 - 60 அலகுகள் | 4.70 | 4.70 | 4.85 | 0.0 | 3.2 |
| | > 60 அலகுகள் | முதல் 60 அலகுகள் | - | 10.00 | 7.85 | - | -21.5 |
| | | 61 - 90 அலகுகள் | 7.50 | 12.00 | 10.00 | 60.0 | -16.7 |
| | | 91 - 120 அலகுகள் | 21.00 | 26.50 | 27.75 | 26.2 | 4.7 |
| | | 121 - 180 அலகுகள் | 24.00 | 30.50 | 32.00 | 27.1 | 4.9 |
| | | 180ற்கும் மேற்பட்ட அலகுகள் | 36.00 | 42.00 | 45.00 | 16.7 | 7.1 |
| மின்சாரம் - எரிபொருள் சீர்ப்படுத்தும் கட்டணம் (அ) | தீர்வைத்தொகுதி | முதல் 30 அலகுகள் | - | - | - | 25.0 | - |
| | | 31 - 60 அலகுகள் | - | - | - | 35.0 | - |
| | | 61 - 90 அலகுகள் | - | - | - | 10.0 | - |
| | | 90ற்கும் மேற்பட்ட அலகுகள் | - | - | - | 40.0 | - |
| நீர் - அலகுக்கான கட்டணங்கள் (ஆ) | தீர்வைத்தொகுதி | முதல் 05 அலகுகள் | 8.00 | 8.00 | 8.00 | 0.0 | 0.0 |
| | | 06 - 10 அலகுகள் | 11.00 | 11.00 | 11.00 | 0.0 | 0.0 |
| | | 11 - 15 அலகுகள் | 20.00 | 20.00 | 20.00 | 0.0 | 0.0 |
| | | 16 - 20 அலகுகள் | 40.00 | 40.00 | 40.00 | 0.0 | 0.0 |
| | | 21 - 25 அலகுகள் | 58.00 | 58.00 | 58.00 | 0.0 | 0.0 |
| | | 26 - 30 அலகுகள் | 88.00 | 88.00 | 88.00 | 0.0 | 0.0 |
| | | 31 - 40 அலகுகள் | 105.00 | 105.00 | 105.00 | 0.0 | 0.0 |
| | | 41 - 50 அலகுகள் | 120.00 | 120.00 | 120.00 | 0.0 | 0.0 |
| | | 51 - 75 அலகுகள் | 130.00 | 130.00 | 130.00 | 0.0 | 0.0 |
| | | 75ற்கும் மேற்பட்ட அலகுகள் | 140.00 | 140.00 | 140.00 | 0.0 | 0.0 |
| பேருந்து கட்டணம் | | | | | | 7.0 | - |

(அ) 16.02.2012 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் சுமத்தப்பட்ட எரிபொருள் சீர்ப்படுத்தும் கட்டணமானது மாதாந்த வலுக்கட்டணத்துக்கு மட்டும் உரியது.
20.04.2013 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின்வலுவின் நிலையான கட்டணங்கள், அலகிற்கான கட்டணங்கள் மற்றும் எரிபொருள் சீராக்கக் கட்டணம் என்பன மேல்நோக்கி திருத்தப்பட்டன.
16.09.2014 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் சீராக்க கட்டணம் நீக்கப்பட்ட அதேவேளை மின்வலுவின் நிலையான கட்டணங்கள் மற்றும் அலகுக்கான கட்டணங்கள் என்பன கீழ்நோக்கி திருத்தப்பட்டன.

(ஆ) 01.11.2014 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 25 அலகுகளுக்குக் குறைவான பாவனையைக் கொண்ட வீட்டுப்பாவனையாளருக்கு விதிக்கப்பட்ட மொத்த கட்டண பெறுமதி 10.0 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பணவீக்கத்திற்கான பங்களிப்பு 2014 மேயில் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்ததுடன் 2014 ஓகத்துவரை குறைந்த மட்டங்களில் விளங்கியது. 2014 செத்தெம்பரில் மின்வலுவின் மீதான எரிபொருள் சீராக்கக் கட்டணமானது நீக்கப்பட்டதுடன் தீர்வையும் திருத்தப்பட்டதன் விளைவாக மொத்த மின்வலுக்கட்டணத்தில் 25 சதவீத வீழ்ச்சியும் ஏற்பட்டது. இதே காலப்பகுதியில் எரிபொருள் விலைகளும் குறைக்கப்பட்டது. 2014 செத்தெம்பரில் ஆண்டுக்காண்டு பணவீக்கம் அழுத்தத்தை ஓரளவுக்கு மிதமாக்குவதற்கு இவ்விலைத் திருத்தங்களின் பகுதியளவான தாக்கம் பங்களிப்புச் செலுத்தியது. இவ்விலைத் திருத்தங்களின் முழுத் தாக்கமும் 2014 ஒத்தோபரில் குறைக்கப்பட்ட திரவ பெற்றோலிய வாயுவின் விலையும் குறிப்பிடத்தக்க அளவில் ஆண்டுக்காண்டு பணவீக்கத்தை 2014 ஒத்தோபரிலிருந்து இலகுவாக்குவதற்கு பங்களித்தது. 2014 நவம்பர் முதல் திசம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மற்றும் திரவ பெற்றோலிய வாயு மீதான மேலதிக குறைப்புக்களும் 25 அலகுகளுக்கு குறைவான பாவனையைக் கொண்ட வீட்டுப் பாவனையாளர்களின் மொத்த நீர்க்கட்டணத்தின் மொத்தப் பெறுமதியின் மீதான 10 வீத குறைப்புக்களும் பணவீக்க அழுத்தங்களை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க பங்களித்தன.

**பன்னாட்டு எரிசக்தி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பலனை நுகர்வோருக்கு வழங்கும் பொருட்டு 2014ஆம் ஆண்டில் எரிபொருளின் விலை பல தடவை கீழ்நோக்கிய திருத்தங்களுக்கு உள்ளானது.** 12.5 கிலோகிராம் சிலிண்டர் திரவ பெற்றோலிய வாயுவின் உள்நாட்டு விலையும் பல தடவைகளில் குறைக்கப்பட்டதுடன் இது 2013இன் இறுதியிலிருந்து 2014ஆம் ஆண்டின் இறுதிக்கான விலையில் 20.9 சதவீத வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் முறையே 7.4 சதவீதம் மற்றும் 8.3 சதவீதங்களால் 2013இன் ஆண்டிறுதியிலிருந்து 2014 ஆண்டிறுதிக்கு குறைவடைந்தது. எரிபொருள் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்ட போதும் 2014இல் பஸ் மற்றும் புகையிரத கட்டணங்கள் மாற்றமின்றி விளங்கின.

### மைய பணவீக்கம்

**உயர் விலை தளம்பலை கொண்டிராத பொருட்களின் விலைகளின் போக்குகளை பிரதானமாக பிரதிபலிக்கும் மையப் பணவீக்கம் ஆண்டுச்சராசரி அடிப்படையில் 2014 சனவரியின் 4.1 சதவீதத்திலிருந்து யூனின் 3.0 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் படிப்படியாக அதிகரித்து 2014 திசெம்பரில் 3.5 சதவீதத்தை அடைந்தது.** குறைந்த தளம்பலுடன் சேர்ந்த கலப்பான போக்கை ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம் வெளிப்படுத்திய சனவரியின் 3.5 சதவீதத்திலிருந்து திசெம்பரின் 3.2 சதவீதத்துக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 4.5 துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்**

(2002=100)

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013(அ) | 2014 (ஆ) | 2013/2012 (அ) | 2014/2013(ஆ) |
| வேளாண்மை | 247.5 | 264.8 | 272.7 | 7.0 | 3.0 |
| கைத்தொழில் | 258.1 | 276.9 | 292.0 | 7.3 | 5.5 |
| பணிகள் | 244.3 | 259.7 | 272.9 | 6.3 | 5.1 |
| **மொ.உ.உ** | **248.9** | **265.6** | **279.0** | **6.7** | **5.1** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

மையப்பணவீக்கத்தின் அனுகூலமான மட்டம் மற்றும் குறைந்த தளம்பல் என்பன கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தம் நன்கு பேணப்பட்டமையை பிரதிபலிக்கின்றது.

### மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களினது சேவைகளினதும் விலை போக்குகளை அளவிடும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி பிரதான மூன்று பொருளாதார துறைகளினது விலை வீழ்ச்சிகளால் உதவப்பட்டு வீழ்ச்சியடைந்தது.** அதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி 2013இன் 6.7 சதவீதத்திலிருந்து 2014இன் 5.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. வேளாண்மை துறை சுருக்கி 2013இன் 7.0 சதவீதத்திலிருந்து 2014இன் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்விலைகளிலான வீழ்ச்சி, இறப்பர், சிறு ஏற்றுமதிப் பயிர், கால்நடை மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தித்துணைத்துறை தவிர்ந்த அனைத்து வேளாண்மைத் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. தொடர்பான அனைத்து துணை சுருக்கிகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் தொடர்ந்து கைத்தொழில்துறை சுருக்கியும் 2013இன் 7.3 சதவீதத்திலிருந்து 2014இன் 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு வர்த்தகம், போக்குவரத்து, அரசு பணிகள் மற்றும் தனியார் பணிகளின் துணைத்துறைகளை கொண்ட பணிகள் துறை சுருக்கியும் 2013இல் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீதத்திலிருந்து 2014இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வர்த்தக அடிப்படையில் இலாபம் இருந்தமையை வெளிப்படுத்தும் வகையில் பணவீக்கம் ஆண்டுக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கியிலும் பார்க்க குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 4.3 கூலிகள்

**அரச, முறைசார் தனியார்துறை மற்றும் முறைசாராத் தனியார் துறைகள் ஆகிய மூன்று துறைகளிலும் உள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2014இல் அதிகரித்தன.** பெயரளவுக் கூலிகளிலான இவ் அதிகரிப்பு அரச துறைகளில் உள்ள ஊழியர்களிடையே குறிப்பிடத்தக்களவில் விளங்குகையில் முறைசார் மற்றும் முறைசாராத் தனியார்

## சிறப்புக்குறிப்பு 4

### உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் ஆரம்பம்

பொருட்கள் மற்றும் பணிகளுக்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சராசரி விலைகளின் நடத்தையின் ஒரு வழிமுறையாக உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (உ.வி.சு) பயன்படுத்தப்படுகிறது. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணானது பேரினப் பொருளாதார ஆய்வுகளில் முக்கிய பங்குகளை ஆற்றுகின்றது. உற்பத்திக் கட்டங்களின் விலைமாற்றங்கள் நுகர்வோர் விலைகளின் மாற்றங்களுக்கு பரிமாற்றப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் உள்நாட்டுச் சந்தைகளில் மொத்த மற்றும் சில்லறைப் பணவீக்க அழுத்தங்களின் அசைவுகளை மதிப்பிடுவதற்கான முக்கிய குறிகாட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணானது நாணயக் கொள்கையின் நடத்தையில் முக்கியமான முன்னணி குறிகாட்டியாக தொழிற்படுகிறது. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் நுகர்வோர் விலை பணவீக்கத்தின் எதிர்கால அசைவுகள் தொடர்பில் சமிக்ஞைகளை வழங்குவதுடன் முதலீட்டாளர்கள் விற்பனையிலிருந்தான சாத்தியமான காசுப்பாய்ச்சல் வருவாய்களை மதிப்பிடுவதற்கு இயலச் செய்வதனால் முதலீட்டாளர்கள் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகளை நுணுக்கமாகக் கண்காணிப்பர். வர்த்தக பங்காளர்களின் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்களுக்கிடையேயான ஒப்பீடானது ஏற்றுமதியாளர்கள் அவர்களுக்கிடையேயான பணவீக்க வேறுபாடுகளை மதிப்பீடு செய்வதற்கு உதவுவதுடன் அதன்படி உற்பத்தி மற்றும் விலையிடலை திட்டமிட அவர்களுக்கு உதவும். தேசிய கணக்கீட்டின மதிப்பீடுகளைத் தொகுப்பதற்காக உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணானது நடைமுறைப் பெறுமதிகளை நிலையான பெறுமதிக்குச் சுருக்குவதற்கு பயன்படுகின்றது.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது அதனால் அண்மைக் காலத்தில் நடாத்தப்பட்ட பொருளாதாரக் கணிப்பீட்டின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணை தொகுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் 2015இன் நடுப்பகுதியில் அதனை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இப்புதிய உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் நிறையிடல்கள் 2010ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வருடாந்த உற்பத்திப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இச்சுட்டெண்ணானது ஆரம்பத்தில் வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பயன்பாடு (மின் மற்றும் நீர்) போன்ற துறைகளை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இறுதிக் கட்டத்தில் பணிகள் துறையின் நடவடிக்கைகளை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது. வேளாண்மைத் துறை நாட்டின் அனைத்து 9 மாகாணங்களின் 161 வேளாண்மைப் பொருட்களின் விலைகளை உள்ளடக்குகின்றது. தயாரிப்பு துறை 25 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட 75 சதவீதமான நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது. இம்மாதிரி, பன்னாட்டு நியமக் கைத்தொழில்[1] வகைப்படுத்தல் அடிப்படையில் 13 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட துறையின் மொத்தப் பெறுமதி வெளியீட்டின் 85 சதவீதத்திற்கு வகைகூறியது.

பொதுப் பயன்பாடுத் துறை இலங்கை மின் சபையின் மின்னுருவாக்கம் மற்றும் விநியோகம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் சேகரிப்பு, தூய்மையாக்கல் மற்றும் விநியோகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இச்சுட்டெண் பன்னாட்டு நாணய நிதியத்தின் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் கைநூலை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு வழிமுறைகளை பின்பற்றி தொகுக்கப்படுகின்றது. சுட்டெண்ணில் அடக்கப்பட்டுள்ள அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் பன்னாட்டு நியமக் கைத்தொழில் வகைப்படுத்தலின் சீரமைப்பு 3 இற்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சுட்டெண் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் எதிர்காலத்தில் மேலதிக முன்னேற்றங்களை உள்ளடக்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. இது அதிக பணிகள் துறை நடவடிக்கைகள், உற்பத்தியாளர் விலைகளுக்குப் பதிலாக அடிப்படை விலைகளின்[2] படியான மதிப்பீடுகள் மற்றும் உற்பத்தி மட்டச் சுட்டெண்களின் மீதான தகவலின் பரவலாக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

தேசிய கணக்கீடுகளின் மீள் அடித்தளத்துடனான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் சமகாலத்திலான ஆரம்பம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தொகுப்பதற்கான சுருக்கியாக அதிக பிரதிபலிப்புள்ள விலைச் சுட்டெண்ணைக் கொண்டிருப்பதற்கான நோக்கில் பணியாற்றும். இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணானது அதன் அறிமுகத்திலிருந்து பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்கான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் பயன்பாட்டைக் கடந்த நான்கு சகாப்த காலமாக வழங்குகிறது. பொருளாதார உற்பத்திக் கட்டமைப்பில் ஏற்படும் விரிவாக்கத்தினால் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப சுட்டெண்ணை வடிவமைப்பதற்கு காலத்திற்குக் காலம் மொத்த விற்பனைச் சுட்டெண்ணானது தேவையான திருத்தங்களுக்குள்ளாக்கப்படுகின்றது. இருப்பினும்,

1. பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் என்பது ஐக்கிய நாடுகளினால் வெளியிடப்பட்ட பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் அடிப்படையிலான பொருளாதார நடவடிக்கைகளின் முறைசார்ந்த வகைப்படுத்தலாகும்.

2. பொருட்கள் அல்லது பணிகளின் அடிப்படை விலை என்பது பிரயோகிக்கத்தக்க உற்பத்தி வழிகள் மற்றும் பொருட்களுக்கான மானியங்களை உள்ளடக்கியதான உற்பத்தி செய்யப்பட்ட ஓரலகு பொருட்கள் அல்லது பணிகளை கொள்வனவாளரிடமிருந்து உற்பத்தியாளரால் பெற்றுக்கொள்ளப்படும் பெறுமதியாகும். இது பொருட்களின் மீதான வரிகள், உற்பத்தி மீதான ஏனைய மானியங்கள், நிரம்பலாளர்ளின் சில்லறை மற்றும் மொத்த எல்லை மற்றும் போக்குவரத்து மற்றும் காப்புறுதிக் கட்டணங்களுக்காக வெவ்வேறாக விலையிடப்பட்டவை நீங்கலாக.

சுட்டெண்ணைத் தொகுப்பதற்கான வழிமுறைகளும் காலத்துடன் சேர்ந்து விரிவாக்கமடைந்துள்ளது. புதிய உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் ஆரம்பிக்கப்பட்டதுடன் மொத்த விலைச் சுட்டெண்ணின் நோக்கங்கள் மிகவும் நடைமுறையானதும் வெளிப்படையானதுமான சுட்டெண்ணினால் வழங்கப்படுவதனால் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் மிகவும் வெளிப்படத்தன்மையானதும் நெகிழ்ச்சித்தன்மையானதுமான சுட்டெண்ணினால் மாற்றீடு செய்யப்படுவதன் முக்கியத்துவத்தை இலங்கை மத்திய வங்கி உணர்ந்தமையால் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் தொகுத்தலை இடைநிறுத்தும்.

உசாத்துணைகள்:

1. *Producer Price Indices – Comparative Methodological Analysis*, Organisation for Economic Co-operation and Development (2011)

துறைகளிலான அதிகரிப்பு மிதமானதாக விளங்கியது. பெயரளவுக் கூலிகளிலான இவ் அதிகரிப்புகள், குறைந்த பணவீக்கச் சூழல் காரணமாக அனைத்து மூன்று துறைகளிலுமுள்ள ஊழியர்களுக்கான உண்மைக் கூலிகளில் இலாபம் ஏற்பட்டது.

## அரச துறைக் கூலிகள்

**புதிய அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணால்[1] அளவிடப்பட்டவாறு அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2014இல் அதிகரித்தன.** இவ் அதிகரிப்பு 2014 சனவரியிலிருந்து அரச ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க வாழ்க்கைப்படி ரூ.1,200ஆல் 2014 வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டமையாலும் 2015 வரவு செலவுத் திட்டத்தில் 2014 நவம்பரிலிருந்து அனைத்து அரச துறை ஊழியர்களுக்கு ரூ.3,000 கொண்ட இடைக்காலப்படி செலுத்தப்பட்டதாலும் ஏற்பட்டது. அதன்படி, சிரேஷ்ட மட்டத்திலான அலுவலர்கள், மூன்றாம் நிலை அலுவலர்கள், இரண்டாம் நிலை அலுவலர்கள், முதலாம் நிலை அலுவலர்கள் ஆகிய அனைத்து நான்கு வகையினதும் பெயரளவு கூலி வீதச்சுட்டெண்கள் 2013இன் 3.6 சதவீதம், 6.0 சதவீதம், 6.5 சதவீதம் மற்றும் 6.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுமிடத்து 2014இல் முறையே 7.0 சதவீதம், 9.8 சதவீதம், 10.7 சதவீதம் மற்றும் 11.6 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தன. அதன் விளைவாக, மத்திய அரசு ஊழியர்களின் ஒட்டுமொத்த பெயரளவுக் கூலி வீதச்சுட்டெண் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 10.5 சதவீதத்தால் அதிகரித்தது.

**இதேவேளை, அரசதுறை ஊழியர்களின் அனைத்து வகைகளும் 2014இல் குறிப்பிடத்தக்க உண்மைக் கூலி அதிகரிப்பை அனுபவித்தனர்.** சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் முதனிலை அலுவலர்களின் உண்மைக் கூலிகள் 2013இன் தொடர்பான வீழ்ச்சிகளான 3.2 சதவீதம், 0.9 சதவீதம், 0.5 சதவீதம் மற்றும் 0.1 சதவீத வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 3.6 சதவீதம், 6.3 சதவீதம், 7.2 சதவீதம் மற்றும் 8.1 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தன. மேலே கூறப்பட்ட கூலி அபிவிருத்திகளின் தாக்கம் 2013இல் அவதானிக்கப்பட்ட 0.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் மத்திய அரசாங்க ஊழியர்களின் ஒட்டுமொத்த உண்மைக் கூலி வீதச் சுட்டெண்ணில் 7.0 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தியது. இத்துறையிலான பெயரளவு கூலி அதிகரிப்புக்கு மேலதிகமாக ஆண்டுகாலப்பகுதியில் பேணப்பட்ட சார்பு ரீதியிலான குறைந்த பணவீக்க மட்டம் அரச துறையிலுள்ள ஊழியர்களால் அனுபவிக்கப்பட்ட உண்மைக் கூலிகளில் அச்சாதகமான அபிவிருத்திக்கு கூடுதலாகப் பங்களிப்புச் செய்தது.

## முறைசார் தனியார் துறை கூலிகள்

**கூலி நிர்ணயச் சபையால் ஆளுகை செய்யப்படும் ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்களால் அளவிடப்பட்டவாறு முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2014இல் அதிகரிப்பைப் பதிவு செய்தன.** அதன்படி, வேளாண்மை, கைத்தொழிலும் வர்த்தகமும் மற்றும் பணிகள் துறைகளின் கூலி வீதச் சுட்டெண்கள் 2014இல் முறையே 2.8 சதவீதம், 8.4 சதவீதம் மற்றும் 3.2 சதவீதத்தால் அதிகரித்தன. 2014இல் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட பின்னடைவின் விளைவாக ஆண்டுகாலப்பகுதியில் இத்துறையின் பெயரளவுக் கூலிகள் சிறிதளவால் அதிகரித்தன. கைத்தொழிலும் வர்த்தகமும் மற்றும் பணிகள் துறைகளிலுள்ள ஊழியர்கள் 2013இல் பெற்றுக்கொண்ட முறையே 32.9 சதவீதம் மற்றும் 21.0 சதவீத அதிகரிப்புகளைத் தொடர்ந்து பெயரளவுக் கூலிகளில் மிதமான அதிகரிப்பைப் பெற்றிருந்தனர். சிறிய கூலி அதிகரிப்பை மட்டும் பதிவு செய்த வேளாண்மைத் துறை ஒட்டுமொத்தச் சுட்டெண்ணில் 66 சதவீதத்துக்கு வகை கூறியது. இதன் விளைவாக, இணைந்த கூலி வீதச்

1. கூடிய பிரதிநிதித்துவத்துடனான அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணைக் கொண்டிருப்பதற்கான தேவையை இனங்கண்டதன் மூலம் புதிய சுட்டெண் ஒன்று இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத் தரமல்லாத ஊழியர்கள் மட்டும் பள்ளிக்கூட ஆசிரியர்களை மட்டும் உள்ளடக்கும் தற்போதைய சுட்டெண்ணை இப்புதிய சுட்டெண் பிரதியீடு செய்கிறது. புதிய சுட்டெண்ணுக்கான அடிப்படை ஆண்டு 2012 ஆகும். சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் முதனிலை மட்டங்களைப் பிரிப்பதன் கீழ், புதிய சுட்டெண் அரச துறை ஊழியர்களின் அனைத்து மட்டங்களுடன் உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது. தொழில்நிலை அமைப்புக்கான அடிப்படைக் காலப் பகுதி 2012இல் நடாத்தப்பட்ட விசேட வருடாந்த பொதுத்துறை தொழில்நிலை அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது. சிறப்புத் தொழில்களுக்கான ஆரம்ப சம்பளத் திட்டங்கள் 2006 ஏப்பிறல் 25ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அமைச்சால் வழங்கப்பட்ட பொது நிர்வாக சுற்று நிருபம் இல 06/2006 இல் குறித்துரைக்கப்பட்டவாறு சேர வேண்டிய படிகள் என்பன இச்சுட்டெண்ணை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

**அட்டவணை 4.6** **கூலிவீதச் சுட்டெண்கள்**

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | | உண்மையான (அ) | | | பெயரளவு | | | உண்மையான (அ) | | |
| | 2012 | 2013 | 2014 (ஆ) | 2012 | 2013 | 2014 (ஆ) | 2012 | 2013 | 2014 (ஆ) | 2012 | 2013 | 2014 (ஆ) |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | | | | | | | |
| **மத்திய அரச ஊழியர்கள் (2012=100)** | **100.0** | **106.3** | **117.5** | **103.6** | **103.0** | **110.2** | **3.5** | **6.3** | **10.5** | **-3.7** | **-0.6** | **7.0** |
| முதல் நிலை அலுவலர் | 100.0 | 106.8 | 119.2 | 103.6 | 103.5 | 111.8 | 3.2 | 6.8 | 11.6 | -3.9 | -0.1 | 8.1 |
| இரண்டாம் நிலை அலுவலர் | 100.0 | 106.5 | 117.9 | 103.6 | 103.1 | 110.6 | 3.4 | 6.5 | 10.7 | -3.8 | -0.5 | 7.2 |
| மூன்றாம் நிலை அலுவலர் | 100.0 | 106.0 | 116.4 | 103.6 | 102.7 | 109.2 | 3.6 | 6.0 | 9.8 | -3.6 | -0.9 | 6.3 |
| மூத்த நிலை அலுவலர் | 100.0 | 103.6 | 110.8 | 103.6 | 100.3 | 103.9 | 3.9 | 3.6 | 7.0 | -3.3 | -3.2 | 3.6 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | | | | | | | |
| **அனைத்து வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | **3,662.0** | **3,869.2** | **4,012.2** | **106.2** | **104.9** | **105.3** | **22.2** | **5.7** | **3.7** | **13.8** | **-1.2** | **0.4** |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 4,433.0 | 4,435.9 | 4,560.9 | 128.6 | 120.3 | 119.7 | 29.3 | 0.1 | 2.8 | 20.4 | -6.4 | -0.5 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 2,402.1 | 3,191.6 | 3,459.1 | 69.7 | 86.5 | 90.8 | 0.0 | 32.9 | 8.4 | -6.9 | 24.1 | 5.0 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 1,851.8 | 2,241.5 | 2,313.2 | 53.7 | 60.7 | 60.7 | 0.0 | 21.0 | 3.2 | -6.9 | 13.1 | 0.0 |

(அ) உண்மைக் கூலிவீதச்சுட்டெண் கொநுவிசு (2006/07=100) இனை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சுட்டெண் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2014இல் பெயரளவு நியதிகளில் 3.7 சதவீதத்தால் மட்டும் உயர்ந்தது.

**முறைசார் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2014இல் சிறிய அதிகரிப்பைக் காட்டின.** கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறையிலுள்ள ஊழியர்கள் 5.0 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்பை அனுபவிக்கையில் வேளாண்மைத் துறையிலுள்ளோர் 2014இல் 0.5 சதவீதம் கொண்ட உண்மைக் கூலித் தேய்வால் பாதிப்படைந்தனர். மேலும், மேற்கூறப்பட்ட இரண்டு துறைகளிலுமுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2013இல் முறையே 24.1 சதவீத இலாபம் மற்றும் 6.4 சதவீத தேய்வைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும், பணிகள் துறையின் உண்மைக் கூலி 2013இன் 13.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கியது. சுட்டெண்ணின் நிறை அமைப்பு காரணமாக வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலி

**அட்டவணை 4.7** **துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் (அ)**

| துறை | ஆண்டுச் சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான (இ) | |
| | 2012 | 2013 | 2014 (ஆ) | 2013 | 2014 (ஆ) | 2013 | 2014 (ஆ) |
| **1. வேளாண்மைத்துறை** | | | | | | | |
| **தேயிலை** | | | | | | | |
| ஆண் | 691 | 764 | 819 | 10.6 | 7.2 | 3.4 | 3.8 |
| பெண் | 512 | 565 | 598 | 10.4 | 5.9 | 3.2 | 2.5 |
| **இறப்பர்** | | | | | | | |
| ஆண் | 741 | 853 | 881 | 15.2 | 3.2 | 7.7 | -0.1 |
| பெண் | 585 | 652 | 702 | 11.4 | 7.7 | 4.2 | 4.3 |
| **தெங்கு (ஈ)** | | | | | | | |
| ஆண் | 887 | 997 | 1,061 | 12.3 | 6.5 | 5.0 | 3.1 |
| **நெல்** | | | | | | | |
| ஆண் | 787 | 882 | 937 | 12.1 | 6.3 | 4.8 | 2.9 |
| பெண் | 599 | 667 | 678 | 11.4 | 1.6 | 4.2 | -1.6 |
| **2. கட்டடவாக்கத்துறை (ஈ)** | | | | | | | |
| **மரவேலையாள்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 1,248 | 1,334 | 1,406 | 6.9 | 5.4 | 0.0 | 2.1 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 824 | 903 | 958 | 9.6 | 6.1 | 2.5 | 2.8 |
| **கொத்தனார்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 1,216 | 1,304 | 1,376 | 7.2 | 5.5 | 0.3 | 2.2 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 823 | 900 | 955 | 9.4 | 6.1 | 2.3 | 2.7 |

(அ) கூலித்தகவல்கள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் தரவு சேகரிக்கும் நிலையங்களிலிருந்தான மாதாந்த கூலி- களை அடிப்படையாகக் கொண்டவை. (2012 - 2013 : 102 நிலையங்கள், 2014 : 106 நிலையங்கள்)
(ஆ) தற்காலிகமானது
(இ) உண்மைக் கூலிகள் கொ.நு.வி.சு (2006/07=100) அடிப்படையாகக் கொண்டவை
(ஈ) இத்துறைகளில் பெண் பங்கேற்பு குறைவாகும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இழப்பின் தாக்கம் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையிலான உண்மைக் கூலி இலாபத்தின் தாக்கத்தைவிடக் குறைவாக விளங்கியதால் முறைசார் தனியார் துறையின் இணைந்த உண்மைக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 1.2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 0.4 சதவீதம் கொண்ட சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தது.

### முறைசாரா தனியார் துறை கூலிகள்

**முறைசாராத் தனியார் துறையில் சராசரி நாளாந்தக் கூலிகள் ஒட்டுமொத்த அடிப்படையில் 2014இல் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் ஆகிய இரண்டிலும் அதிகரித்தன.** முறைசாரா தனியார் துறையில், கூலிகள் சந்தை விலைகளால் தீர்மானிக்கப்படுவதுடன் பெயரளவுக் கூலிகள் தொழில் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளிலான மாற்றத்தின்படி சீராக்கப்படுகின்றன. முறைசாராத்துறை கூலிகளின் அசைவுகள், வேளாண்மை மற்றும் கட்டடவாக்கச் செயற்பாடுகளை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கியால் தொழில்படுத்தப்படும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்படும் உரிய கூலித் தகவலைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

**முறைசாரா தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் 2014 காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் சராசரியாக 5.6 சதவீதத்தால் அதிகரித்தன.** முறைசாரா வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகளிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2013இன் 12.0 சதவீதம் மற்றும் 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 5.5 சதவீதத்தாலும் 5.7 சதவீதத்தாலும் அதிகரித்தன. வேளாண்மை துறையினுள், இறப்பர், தெங்கு, நெல் மற்றும் தேயிலைத் துணை வகைகளின் சராசரி நாளாந்தக் கூலிகள் 2014இல் முறையே 5.2 சதவீதம், 6.4 சதவீதம், 4.3 சதவீதம் மற்றும் 6.7 சதவீதத்தால் அதிகரித்தன. கட்டடவாக்கத் துறையில் தச்சர் மற்றும் கொத்தனரால் உழைக்கப்பட்ட சராசரி நாளாந்தக் கூலிகள் 2013இன் 8.0 சதவீதம் மற்றும் 8.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 5.7 சதவீதத்தாலும் 5.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக தொழிலாளர் இடம்பெயர்ந்ததன் காரணமாக தொழிலாளர்களுக்கான உயர் கேள்வி மற்றும் தொழிலாளர் நிரம்பலிலான சுருக்கம் கட்டடவாக்கத்துறையில் இக்கூலி அசைவுகளுக்கு இட்டுச் சென்றிருக்கலாம்.

**முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் சராசரி நாளாந்தக் கூலிகள் உண்மை நியதிகளில் இவ்வாண்டில் 2.2 சதவீதத்தால் அதிகரித்தன.** தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் நெல் துணை துறைகளின் உண்மைச் சராசரி நாளாந்தக் கூலிகள் முறையே 3.3 சதவீதம், 1.9 சதவீதம், 3.0 சதவீதம் மற்றும் 1.0 சதவீதத்தால் அதிகரித்தன. கட்டடவாக்கத்துறையில் தச்சர் மற்றும் கொத்தனார் இவ்வாண்டில் அவர்களின் உண்மைக் கூலிகளில் முறையே 2.3 சதவீதம் மற்றும் 2.4 சதவீத இலாபத்தை அனுபவித்தனர். வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகள் 2013இன் 4.8 சதவீதம் மற்றும் 1.1 சதவீத அதிகரிப்புகளுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 2.1 சதவீதம் மற்றும் 2.4 சதவீத ஒட்டுமொத்த உண்மைக் கூலி அதிகரிப்புகளைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, முறைசாராத் தனியார் துறையிலுள்ள ஊழியர்களுக்கான ஒட்டுமொத்த நாளாந்த உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டின் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் சராசரியாக 2.2 சதவீதத்தால் அதிகரித்தன.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2014இல் நடு ஆண்டு குடித்தொகை 0.9 சதவீத வருடாந்த வளர்ச்சி வீதத்துடன் 20.675 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.** இது 10.642 மில்லியன் பெண்களையும் 10.033 மில்லியன் ஆண்களையும் உள்ளடக்கியுள்ளது. குடித்தொகை அடர்த்தி[2] முல்லைத்தீவு தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலிருந்தான பங்களிப்புடன் 2013இன் 327 இலிருந்து 2014இல் 330 இற்கு தொடர்ந்து அதிகரித்தது. 2014இல் மேல் மாகாணம் குடித்தொகையின் ஆகக்கூடிய அதிகரிப்பை (41,000) பதிவு செய்து மொத்த குடித்தொகையில் நான்கிலொரு பங்குக்கும் கூடுதலாக பதிவு செய்த ஆகக்கூடிய குடித்தொகையுள்ள மாகாணமாக தொடர்ந்து விளங்குகிறது. மிகக் குறைந்த குடித்தொகையைக் கொண்ட மாகாணமான வட மாகாணம் 2014இல் குடித்தொகையில் மிகக் குறைந்த அதிகரிப்பைப் (9,000) பதிவு செய்தது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 2 மில்லியனை விஞ்சியதுடன் இரண்டும் சேர்ந்து மொத்த குடித்தொகையின் ஐந்திலொரு பகுதிக்கும் கூடுதலாக வகை கூறியது. குருணாகல், கண்டி, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களின் குடித்தொகை ஒவ்வொன்றும் ஒரு மில்லியனை விஞ்சியது. இதற்கு மாறாக 100,000 ஐ விட குறைந்த குடித்தொகையைக் கொண்ட ஒரே மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் 2014இல் 93,000 குடித்தொகையைப் பதிவு செய்தது. பதிவாளர் நாயகத் திணைக்களத்தின்படி, -2.2 சதவீதம் என்ற தேறிய குடிப்பெயர்வு வீதத்துடன் 2014இற்கான நடுவாண்டு குடித்தொகையுடன் தொடர்பான ஆயிரம் நபர்களில் உள் குடிப்பெயர்வு மற்றும் வெளி குடிப்பெயர்வு என்பன முறையே 2,763 மற்றும் 2,807 ஆக காணப்பட்டது. குடித்தொகையின்

2. சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கான ஆட்களின் எண்ணிக்கை

**அட்டவணை 4.8 மாவட்ட அடிப்படையில் குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ) (ஆ)**

| மாவட்டம் | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி |
| கொழும்பு | 2,326 | 3,441 | 2,343 | 3,466 |
| கம்பஹா | 2,313 | 1,725 | 2,328 | 1,736 |
| களுத்துறை | 1,227 | 779 | 1,236 | 784 |
| கண்டி | 1,384 | 722 | 1,397 | 729 |
| மாத்தளை | 489 | 251 | 494 | 253 |
| நுவரெலியா | 719 | 421 | 728 | 427 |
| காலி | 1,068 | 660 | 1,077 | 666 |
| மாத்தறை | 819 | 645 | 826 | 650 |
| அம்பாந்தோட்டை | 606 | 243 | 616 | 247 |
| யாழ்ப்பாணம் | 589 | 634 | 593 | 638 |
| மன்னார் | 101 | 54 | 102 | 54 |
| வவுனியா | 174 | 93 | 176 | 95 |
| முல்லைத்தீவு | 93 | 39 | 93 | 39 |
| கிளிநொச்சி | 116 | 96 | 118 | 98 |
| மட்டக்களப்பு | 529 | 203 | 534 | 205 |
| அம்பாறை | 658 | 156 | 666 | 158 |
| திருகோணமலை | 384 | 152 | 389 | 154 |
| குருநாகல் | 1,624 | 351 | 1,636 | 354 |
| புத்தளம் | 769 | 267 | 778 | 270 |
| அநுராதபுரம் | 868 | 130 | 879 | 132 |
| பொலனறுவை | 408 | 133 | 412 | 134 |
| பதுளை | 822 | 291 | 831 | 294 |
| மொனராகல | 456 | 83 | 463 | 84 |
| இரத்தினபுரி | 1,097 | 339 | 1,110 | 343 |
| கேகாலை | 844 | 501 | 850 | 504 |
| **முழுத்தீவு** | 20,483 | 327 | 20,675 | 330 |

மூலம் : பதிவாளர் நாயகத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

(ஆ) நடு ஆண்டு குடித்தொகை மதிப்பீடுகள், 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீட்டினது முன்னேற்பாட்டு தரவுகள் மற்றும் 20 மார்ச்சு தொடக்கம் 30 மார்ச்சு 2012 வரையிலான காலப்பகுதியின் இயற்கை குடித்தொகை அதிகரிப்பு மற்றும் தேறிய குடியகல்வு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது.

குறிப்பு : இம்மதிப்பீடானது 20 மார்ச்சு 2012 முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றப்பட்டவர்களின் குடித்தொகையில் மாவட்ட மட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கியிருக்கவில்லை.

வயது அமைப்பின் அடிப்படையில், மொத்தக் குடித்தொகையின் 57.2 சதவீதம் 15-54 வயதுத் தொகுதியினரிடையே காணப்பட்டது. 0-14 வயதுடையோர் மற்றும் 55 வயதும் அதற்கு கூடுதலானோரின் குடித்தொகை முறையே 25.3 சதவீதமாகவும் 17.5 சதவீதமாகவும் விளங்கியது.

## தொழிற்படை

**15 வயதும் அதற்குக் கூடிய வயதுடைய பொருளாதார ரீதியாக செயற்பாட்டில் இருக்கும் குடித்தொகை என வரைவிலக்கணம் செய்யப்படும் தொழிற்படை 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் சிறிதளவால் அதிகரித்தது.** தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழிற்படை 8.802 மில்லியனிலிருந்து 8.805 மில்லியனுக்கு 0.03 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது. தொழில்புரிவோரின் எண்ணிக்கை ஆண்டில் அதிகரித்தவேளையில் தொழில்புரியாதோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து பொருளாதாரத்தின் மேலதிகத் தொழிலை உள்ளீர்க்கும் இயலளவு அதிகரித்தமையை வெளிப்படுத்தியது.

**தொழிற்படை அதிகரித்த போதிலும் 2014இல் தொழிற்படை பங்கேற்பு வீதம்[3] 2013இல் பதிவு செய்யப்பட்ட 53.8 சதவீதத்திலிருந்து 53.3 சதவீதத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** 2014 காலப்பகுதியில் தொழிற்படை அதிகரிப்பை விட தொழில் புரியும் குடித்தொகை அதிகளவால் அதிகரித்து தொழிற்படை பங்கேற்பு வீதத்தை வீழ்ச்சியடையச் செய்தது. இவ்வீழ்ச்சியானது தொழிற்படையில் கிராமிய தொழிற்படை பங்கேற்பு வீதம் 55.0 சதவீதத்திலிருந்து 54.1 சதவீதத்துக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்டது. இது குறிப்பாக பெண்களின் பங்கேற்பால் ஏற்பட்டதுடன் அவர்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் ஆண்டு முழுவதிலும் வீழ்ச்சியடைந்தமையை பிரதிபலித்தது. ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாரினதும் தொழிற்படைப் பங்கேற்பு வீதங்கள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தமையை பால் ரீதியிலான தொழிற்படை பங்கேற்பு வீதம் புள்ளிவிபரம் வெளிப்படுத்துகிறது. ஆண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 74.9 சதவீதத்திலிருந்து 74.6 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 35.6 சதவீதத்திலிருந்து 34.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## தொழில்நிலை

**2014இல் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 8.418 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.424 மில்லியனுக்கு 0.1 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு குறிப்பாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் தொழில் நிலையில் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் அவதானிக்கப்பட்டதோடு இத்துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தால் உதவப்பட்டது. எனினும் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதிகளில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட பின்னடைவால் இத்துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை 2014இல் வீழ்ச்சியடைந்தது. அதன்படி, வேளாண்மை துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின்

3. 15 வயதுக்கும் அதற்குக் கூடிய வயதுடைய குடும்ப அலகு குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதம்

**அட்டவணை 4.9 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2013 | 2014 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கான |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 ஆட்கள் | 16,360 | 16,420 | 16,454 | 16,646 | 16,608 | 16,532 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,802 | 8,770 | 8,812 | 8,854 | 8,783 | 8,805 |
| தொழில் உள்ளோர் | 8,418 | 8,407 | 8,413 | 8,480 | 8,396 | 8,424 |
| தொழில் அற்றோர் | 384 | 362 | 399 | 374 | 387 | 381 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 53.8 | 53.4 | 53.6 | 53.2 | 52.9 | 53.3 |
| ஆண் | 74.9 | 74.4 | 75.2 | 74.6 | 74.3 | 74.6 |
| பெண் | 35.6 | 35.3 | 34.8 | 34.4 | 34.5 | 34.8 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்
(ஆ) தற்காலிகமானது.
(இ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

எண்ணிக்கையின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 29.7 சதவீதத்திலிருந்து 2014இன் 28.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் துறையில் தொழில் நிலையின் பங்கு 2013இன் தொடர்பான காலப்பகுதியின் 26.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 26.5 சதவீதத்துக்கு சிறிதளவால் அதிகரித்தது. தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கத் துணைத் துறைகளிலான வளர்ச்சி கைத்தொழில் துறையில் தொழில்நிலை உருவாக்கத்தை அதிகரித்தது. பணிகள் துறை பொருளாதாரத்தில் ஆகக்கூடிய தொழில்நிலை உருவாக்கும் துறையாக தொடர்ந்து விளங்கி மொத்தத் தொழில் நிலையில் 2013இல் பதிவு செய்யப்பட்ட 44.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 45.0 சதவீதப் பங்குக்கு பங்களிப்புச் செய்தது.

**அட்டவணை 4.10 பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ) (ஆ)**

| துறை | ('000 நபர்கள்) | | | | | | மொத்த தொழில் நிலையில் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 (இ) | | | | | 2013 | 2014 (இ) |
| | | கா.1 | கா.2 | கா.3 | கா.4 | ஆண்டுக்கான | | |
| **வேளாண்மை** | **2,505** | **2,222** | **2,369** | **2,455** | **2,553** | **2,400** | **29.7** | **28.5** |
| **கைத்தொழில்** | **2,202** | **2,339** | **2,189** | **2,253** | 2,134 | **2,229** | **26.2** | **26.5** |
| கல்லுடைத்தலும் சுரங்கம் அகழ்தலும் | 100 | 85 | 76 | 92 | 63 | 79 | 1.2 | 1.0 |
| தயாரிப்பு | 1,514 | 1,678 | 1,511 | 1,523 | 1,430 | 1,535 | 18.0 | 18.2 |
| கட்டடவாக்கம், மின்வலு, வாயு, நீராவி, குளிரூட்டப்பட்ட வழங்கல், நீர் வழங்கல், கழிவு நீர் அமைப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலை தவிர்க்கும் நடவடிக்கைகள் | 588 | 576 | 602 | 638 | 641 | 615 | 7.0 | 7.3 |
| **பணிகள்** | **3,711** | **3,846** | **3,855** | **3,772** | **3709** | **3,795** | **44.1** | **45.0** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளில் பழுதுபார்த்தல் | 1,151 | 1,093 | 1,136 | 1,131 | 1,082 | 1,111 | 13.7 | 13.2 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 517 | 554 | 480 | 570 | 508 | 528 | 6.1 | 6.3 |
| வதிவிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 188 | 218 | 169 | 219 | 192 | 200 | 2.2 | 2.4 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | 63 | 75 | 87 | 53 | 71 | 71 | 0.7 | 0.8 |
| நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 153 | 161 | 170 | 153 | 159 | 161 | 1.8 | 1.9 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 68 | 54 | 60 | 42 | 54 | 52 | 0.8 | 0.6 |
| நிர்வாகம் மற்றும் துணைச்சேவை நடவடிக்கைகள் | 107 | 99 | 116 | 107 | 127 | 112 | 1.3 | 1.3 |
| பொது நிர்வாகம் மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு | 629 | 651 | 685 | 667 | 620 | 656 | 7.5 | 7.8 |
| கல்வி | 330 | 372 | 339 | 292 | 361 | 341 | 3.9 | 4.0 |
| மனிதநல மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 141 | 144 | 141 | 124 | 144 | 138 | 1.7 | 1.6 |
| ஏனையவை (ஈ) | 364 | 425 | 472 | 414 | 391 | 425 | 4.3 | 5.1 |
| **மொத்த தொழில்நிலை** | **8,418** | **8,407** | **8,413** | **8,480** | **8396** | **8,424** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதமாக | 95.6 | 95.9 | 95.5 | 95.8 | 95.6 | 95.7 | | |

(அ) பன்னாட்டு சாதாரண கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4இற்கு அமைவாக பொருளாதார நடவடிக்கைகள் மேல் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்

(இ) தற்காலிகமானது.

(ஈ) தொழில் வழங்குநர்களாக குடியிருப்புகளின் நடவடிக்கைகள், மெய் ஆதனங்கள், கலை கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு, ஆட்சிப் பகுதிக்கு அப்பால் உள்ள நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## சிறப்புக்குறிப்பு 5 — இலங்கையில் பெண் தொழிற்படையின் பங்கேற்பினை மேம்படுத்துவதன் முக்கியத்துவம்

### அறிமுகம்

இலங்கைப் பொருளாதாரம் எதிர்வருகின்ற ஆண்டுகளில் உயர் வேகத்தில் வளர்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளமையால், நாட்டில் கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் இவ்வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். நாட்டில் வீழ்ச்சியடைந்து செல்லும் தொழிலின்மை வீதம் மற்றும் இலங்கையில் தற்பொழுது காணப்படும் குடித்தொகையியல் பண்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் என்பனவற்றிற்கும் மத்தியில் ஓய்வுபெறும் வயது 60 வயதாகக் கருதப்படுமிடத்து இலங்கை தற்பொழுது அனுபவிக்கின்ற குடித்தொகை மூலமான நன்மைகள் 2017 அளவில் படிப்படியாகக் குறைவடையக்கூடுமென்பதனால், இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமான துறைகளிலொன்றாக குறைந்த தொழிற்படை பங்கேற்பு வீதம் காணப்படுகிறது. பொருளாதாரமானது நியாயமான உயர் வேகத்தில் வளர்ச்சியடைவதற்காக, தேர்ச்சிபெற்ற மற்றும் நன்கு பயிற்றப்பட்ட தொழிற்படையானது சாத்தியமான வளர்ச்சியின் மூலம் அடையாளம் காணப்பட்ட துறைகளின் அதிகரித்த கேள்விகளை வைத்திருப்பதற்கு தேவைப்படுத்தப்படுகிறது. இலங்கையின் எதிர்கால வளர்ச்சி உத்வேகமானது தேர்ச்சிபெற்ற அலுவலர்களைப் பிரதான உள்ளீடாகக் கருதுகின்ற பணி அடிப்படையிலான கைத்தொழில்களினால் பிரதானமாக ஆதரவளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரமொன்றின் வேலைவாய்ப்பின்மை வீதத்தின் வீழ்ச்சியானது, தொழில் தேடுகின்ற பெரும்பாலான மக்கள் வெற்றியடைந்துள்ளமையைக் காட்டும் சாதகமான குறிகாட்டியாக வழமையாக நோக்கப்படுவதன் காரணத்தால் ஒரு சாதகமான அபிவிருத்தியாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இது ஊழியர் பற்றாக்குறைக்கான சமிக்ஞைகளாகவும் காணப்படுகிறது. இங்கு, ஊழியச் சந்தையானது விரிவடைந்துவரும் பொருளாதாரமொன்றின் வளர்ந்துவரும் ஊழியர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயலாதிருக்கிறது. 2014இன் இலங்கையின் வேலையின்மை வீதம் 4.3 சதவீதமாக விளங்கியது. இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாடு அளவீடுகளின்[1] முடிவுகளின்படி ஊழியக் குறைவானது வியாபார விரிவாக்கத்தின் ஒரு முக்கிய நெருக்கடியாக பல தனியார் துறை நிறுவனங்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன. இருப்பினும், இந்த ஊழியர் பற்றாக்குறையானது மக்களின் குறைவின் காரணமாக மட்டுமல்லாது குறைந்த தொழிற்படை பங்களிப்பு வீதத்தின்[2] காரணமாகவும் காணப்படுகிறது. இலங்கையின் தொழிற்படை பங்குபற்றும் வீதம் அண்மைய ஆண்டுகளில் ஏறத்தாழ 53 சதவீதத்திற்கு குறைவடையும். தொழிற்படை பங்குபற்றும் வீதம் 53 சதவீதமாக குறைவடைந்துள்ளமையானது வேலைசெய்யும் வயது குடித்தொகையின் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் ஊழியம் ஒன்றினுள் ஈடுபடுவதற்கான விருப்பத்தினைக் கொண்டிருக்காதவர்கள் என்பதனை விளக்குவதாகவுள்ளது. இருப்பினும், வேலை செய்யக்கூடிய வயதினைக் கொண்ட இக்குடித்தொகை தொழிற்படைக்கு ஈர்த்துக்கொள்ள முடியுமாயின் தொழிற்சந்தையின் அழுத்தத்தினை தளர்த்தலாம்.

இன்னும் ஒரு சில ஆண்டுக் காலப்பகுதியில் நாட்டில் குடித்தொகையில் ஏற்படவிருக்கும் அளப்பரிய மாற்றங்களுடன் கூடிய இக்காலகட்டத்தில் தொழிற்பாட்டு மிகக் கூடுதலான

**அட்டவணை சி.கு 5.1 — இலங்கையின் தொழிற்படைப் பங்கேற்பு மற்றும் தொழிலின்மை விகிதங்கள் (2009-2014)**

| ஆண்டு | தொழிற்படை பங்கேற்பு விகிதம் | | | தொழிலின்மை விகிதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 2009 | 79.7 | 36.2 | 54.1 | 4.3 | 8.6 | 5.9 |
| 2010 | 75.0 | 34.4 | 53.4 | 3.5 | 7.7 | 4.9 |
| 2011 | 74.0 | 34.4 | 53.0 | 2.7 | 7.0 | 4.2 |
| 2012 | 75.0 | 32.9 | 52.6 | 2.8 | 6.2 | 4.0 |
| 2013 | 74.9 | 35.6 | 53.8 | 3.2 | 6.6 | 4.4 |
| 2014 | 74.6 | 34.8 | 53.3 | 3.2 | 6.5 | 4.3 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை சி.கு 5.2 — தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளில் ஆண் மற்றும் பெண் தொழிற்படை பங்கேற்பு விகிதங்கள்**

| நாடு | தொழிற்படை பங்கேற்பு விகிதம் (15+ வயது குடித்தொகையினரின் சதவீதம்) | | | |
|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | |
| | 2008 | 2013 | 2008 | 2013 |
| இலங்கை | 76.1 | 76.3 | 36.6 | 35.1 |
| வங்காளதேசம் | 84.5 | 84.1 | 56.3 | 57.4 |
| இந்தியா | 81.8 | 79.9 | 31.8 | 27.0 |
| மலேசியா | 75.7 | 75.5 | 44.3 | 44.4 |
| நேபாளம் | 87.9 | 87.1 | 79.8 | 79.9 |
| சிங்கப்பூர் | 77.3 | 77.2 | 56.4 | 58.8 |
| தாய்லாந்து | 81.5 | 80.7 | 65.8 | 64.3 |
| சீனா | 78.3 | 78.3 | 64.6 | 63.9 |
| யப்பான் | 72.9 | 70.4 | 48.5 | 48.8 |
| கென்யா | 71.0 | 72.4 | 60.9 | 62.2 |
| கம்போடியா | 86.1 | 86.5 | 79.1 | 78.8 |
| வியட்னாம் | 81.3 | 82.2 | 72.2 | 73.0 |

மூலம்: உலக வங்கி தரவுத்தளம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

1. வியாபாரத் தோற்றப்பாடு அளவீடு பொருளாதாரத்தின் எல்லா துறைகளையும் பிரதிநிதிப்படுத்தும் விதத்தில் பாரிய வியாபார நிறுவனங்களின் மாதிரிகளை உள்ளடக்கி ஒவ்வொரு காலாண்டும் மேற்கொள்ளப்படுகிறது.
2. தொழிற்படை பங்கேற்பு வீதமானது 15 வயதும் அதற்கு மேற்பட்டோரின் வீட்டுக் குடித்தொகை மொத்த தொழிற்படையில் சதவீதம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

தொழிலாளர்களைக் கவர்வது மிக முக்கியமானதொன்றாகும். குடித்தொகை நன்மைகள் யுகத்திலிருந்து வயதானோர் குடித்தொகை யுகத்திற்கு நகரும் நாட்டின் மாற்றங்கள் மூலம் உலக வங்கி எறிவுகளின்படி நான்கு நபர்களில் ஒருவர் 60 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுவதனால், தங்கியிருப்போர் விகிதம்[3] எதிர்காலத்தில் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சிறிய எண்ணிக்கையிலான நபர்களினால் உருவாக்கப்படும் வருமானம் பெரும் எண்ணிக்கையிலான தங்கியிருப்பாளர்களுக்குப் போதுமானதாக இல்லாதிருக்கும் போது இந்த நிகழ்வுகளின் காரணமாக வறுமை ஒரு பிரச்சனையாக மாறும். தங்கியிருப்போர் தொகையின் அதிகரிப்பின் காரணமாக நாட்டில் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு முறைமையானது வயதான குடித்தொகையின் கேள்விகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லாதிருப்பதன் காரணத்தினால் வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றைக் கட்டுப்படுத்துவது அதிகரித்துவரும் சவாலாக இருக்கும். முதியோரில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியின் இலங்கையில் பாதிக்கக்கூடிய நிலையிலுள்ளனர். ஏனெனில் அவர்கள் பொது உதவியோ அல்லது ஓய்வூதியமோ பெறுவதில்லை (உலக வங்கி 2013). தற்போதைய தொழிற்படை பங்குபற்றுதல் விகிதம் தொடருமாயின், குடித்தொகை நன்மை காலத்திற்குப் பின்னரும் சராசரி வாழ்க்கைத் தரங்களைப் பேணும் நோக்கில், தற்போதுள்ள தொழிற்படை மேலதிக முயற்சிகள் மூலம் வளர்ந்துவரும் தங்கியிருப்போர் குடித்தொகைக்கு வசதிகளை வழங்க வேண்டியிருக்கும். எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் முழு குடித்தொகையிலும் நலன்புரி தரங்களைப் பேணுவதற்கும் தொழிற்படை பங்கேற்பு வீதத்தினை மேம்படுத்துவது மிக இன்றியமையாததாகும்.

**குறைந்தளவான பெண் தொழிற்படை பங்கேற்பு**

குறைந்தளவான ஒட்டுமொத்த தொழிற்படை பங்கேற்பு விகிதத்திற்கு குறைந்தளவு பெண்கள் தொழிற்படை பங்கேற்பே காரணமாக அமைந்துள்ளது (அட்டவணை சி.கு 4.1). நடைமுறையில் இலங்கையின் ஆண்கள் தொழிற்படையில் பங்குபற்றுதல் விகிதம் ஏறத்தாழ 75 சதவீதமாகக் காணப்படுவதுடன் பெண்கள் தொழிற்படையில் பங்குபற்றுதல் விகிதம் ஏறத்தாழ 35 சதவீதமாகக் காணப்படுகிறது. பிராந்தியத்திலுள்ள நாடுகள் மற்றும் ஏனைய ஒப்பீட்டு நாடுகளுக்கெதிராக மதிப்பிடும் போது, இலங்கையில் பெண் தொழிற்படை பங்குபற்றுநர் விகித புள்ளிவிபரம் கணிசமானளவு குறைவாக அறிக்கையிடப்படுகிறது (அட்டவணை சி.கு 4.2). உலகளாவிய தொழிற்படை பங்குபற்றுதலின் 28ஆவது பாரியளவு பால்நிலை இடைவெளியை இலங்கை அறிக்கையிடுவதனை உலக வங்கி புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 126 நாடுகளை கருத்திற்கொண்டு பால்நிலை இடைவெளியின் காரணமாக தலைக்குரிய வருமான இழப்பு தொடர்பான கற்கையானது தொழில், சுயதொழில், தொழிற்படை பங்குபற்றல் மற்றும் கூலிகளில் பால்நிலை இடைவெளி காரணமான இலங்கையின் தலைக்குரிய வருமான இழப்பு 20 சதவீதம் என அறிக்கையிடப்படுகிறது (Teignier and Cuberes, 2014).

பால் அடிப்படையிலான தொழிலின்மை வீதங்கள் பல ஆண்டுகளாக பெண் வேலையின்மை வீதமானது ஆண் தொழிலின்மை வீதத்தின் இரண்டு மடங்காக இருப்பதனை மேலும் எடுத்துக்காட்டுகிறது (அட்டவணை சி.கு 4.1). இது தொழில்புரிய விரும்புகின்ற பெண்களின் சிறு பங்கினர் கூட தொழிற்சந்தைகளில் தொழில்புரிவதற்கு ஆண்டுகளிலும் பார்க்கக் கூடுதலான இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்பதனைப் பிரதிபலிக்கிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்படை அளவையின்படி, பொருளாதார ரீதியாக செயற்படாத வேலை செய்யும் வயதிலுள்ள ஆண்கள் ஏறத்தாழ 25 சதவீதத்தில் காணப்படுவதுடன், பொருளாதார ரீதியில் பெருமளவு செயற்படாது இருப்பதற்கான காரணம் அவர்கள் கற்கைகளில் ஈடுபடுவதாகும். பொருளாதார ரீதியாக செயற்படாத பெண்கள் ஏறத்தாழ 65 சதவீதமாகக் காணப்படுவதுடன் பெரும்பாலானவர்கள் வீட்டுப்பணி பொறுப்புக்களிலுள்ளனர் (அட்டவணை சி.கு 4.3). இது தொடர்பில் இலங்கையிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு வகையினரும் சமஅளவிலான கல்வியினைக் கொண்டுள்ளமை திகைப்படையச் செய்யும் உண்மையாகும். தொழிலில் நீடித்திருப்பதைவிட குடும்பங்களின் சமூக மாற்றத்தின் மூலம் குடும்பங்கள் தனிக்குடித்தனங்களாக மாறுவதனால் வீட்டுத்துறைப் பொறுப்புக்களை எடுப்பதற்காக தொழிற்படையை விட்டு விலகுகின்ற பெண்களின் போக்கு தற்போது அவதானிக்கப்படுகிறது. கூட்டுக் குடும்பத்தில், குறிப்பாக முதியோர்களின் அதிகளவான ஆதரவுடன் உறுப்பினர்கள் தங்களின் வீட்டுத்துறை பொறுப்புக்களைப் பகிர்வதற்கு முனைகின்றனர். தனிக் குடும்பங்கள் அவ்வாறான ஆதரவினைப் பெறுவதில்லை. ஆனாலும் அவர்கள் அவர்களின் வீட்டுத்துறைப் பொறுப்புக்களை முகாமை செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

**அட்டவணை சி.கு 5.3**
**பாலின்படி பொருளாதார ரீதியாக செயற்படாமைக்கான காரணங்கள் (2011-2013)**

| காரணம் | மொத்தம் | | | ஆண் | | | பெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருத்தல் | 39.3 | 41.6 | 48.0 | 4.4 | 4.8 | 5.9 | 54.7 | 57.1 | 62.1 |
| கல்வியில் ஈடுபட்டிருத்தல் | 35.9 | 35.3 | 20.5 | 57.7 | 59.2 | 37.8 | 26.4 | 25.2 | 14.7 |
| ஓய்வு/ வயது மூப்பு | 16.4 | 15.5 | 20.7 | 23.5 | 23.0 | 34.8 | 13.2 | 12.4 | 15.9 |
| உடல் ரீதியான நோய்கள்/ ஊனமுற்றோர் | 5.1 | 4.5 | 6.1 | 9.1 | 8.2 | 12.9 | 3.4 | 3.0 | 3.8 |
| ஏனையவை | 3.3 | 3.1 | 4.7 | 5.3 | 4.8 | 8.5 | 2.4 | 2.3 | 3.4 |
| அனைவரும் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

3. தங்கியிருப்போர் விகிதமானது 15 மற்றும் 59 வயதுக்கிடைப்பட்ட மொத்த ஆட்களுக்கு தங்கியிருப்போர்களின் எண்ணிக்கை என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

**குறைந்தளவு பெண் தொழிற்படை பங்குபற்றல் மற்றும் உயர்ந்த பெண் தொழிலின்மைக்கான காரணங்கள்**

அதிகளவான பெண்கள் தொழிற்படையை விட்டு விலகுதலை தெரிவு செய்வதற்கு அல்லது வேலை செய்வது அவர்களுக்கு கஷ்டமானதாக இருப்பதற்கான பல முக்கிய காரணங்களாகவுள்ளன. குறிப்பாக, குழந்தை பராமரிப்புக்கள் கூடிய வீட்டுத்துறைப் பொறுப்புக்களில் ஈடுபடுதல், பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் வேலைத்தலத்திற்கு மற்றும் வேலைத்தலத்திலிருந்தான போக்குவரத்து வசதிகள் கிடைக்காமை, வேலைத்தள நேர இடங்களை பின்பற்றுதலிலுள்ள கஷ்டங்கள் மற்றும் இடைவெளியின் பின்னர் வேலை வாய்ப்பின்மை தேடுவதிலுள்ள இயலாமை போன்றவை இலங்கையின் குறைந்தளவான பெண் தொழிற்படை பங்கேற்புக்கான பிரதான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை பெண்கள் வீட்டுத்துறைப் பொறுப்புக்களை எடுக்கின்ற வேளையில் ஆண்கள் உழைத்தலுடன் ஈடுபட்டிருக்க வேண்டும் என்கிற சமூக விதி முறையும் காணப்படுகிறது. இந்தப் பாரம்பரிய கருத்து பொருளாதாரச் சுதந்திரங்களில் பெண்கள் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தினை தருகிறது. பெண் தொழிற்படை பங்குபற்றுதலானது கல்வியில் அதேபோன்று வருமான மட்டங்களின் நியதிகளில் U வடிவத்தைக் காட்டுகிறதென அடையாளம் காணப்பட்டுள்ளது[4] (உலக வங்கி 2013). இதன் கருத்து, நடுத்தர கல்வியில் அல்லது நடுத்தர வருமான மட்டத்தில் வாழும் வீட்டுத்துறையைச் சேர்ந்த பெண்கள் தொழிற்படையிலிருந்து வெளியேறி வீட்டுத்துறைப் பொறுப்புக்களை தெரிவு செய்ய முனைகின்றனர். பெரும்பாலான பெண்கள் தரமான சிறுவர் பராமரிப்பு வேலைநிலையங்கள் இல்லாமையின் காரணமாக தங்களின் தொழில்களை விட்டு விலகுவதனை தெரிவு செய்வதாக முன்பள்ளிச் சிறுவர்களைக் கொண்ட குடும்ப அலகுகளின் தொழிலாளர் நிரம்பல் மீதான பொருளாதார ஆய்வு தெரிவிக்கின்றது. இது கல்வியறிவுள்ள தாய்மார்களுக்கிடையில் அதிக முக்கியம் பெறுகின்றது (பிரேமரத்ன, 2011). கல்வி ஒரு பொதுப் பண்டமாகக் காணப்படுகின்ற நாட்டில், பெண்களின் கல்வி மீது செலவிடப்படுகின்ற பொது நிதியம் எதிர்பார்த்த வருமானத்தை உருவாக்குவதில்லை என சுட்டிக்காட்டப்படுவதாக நோக்கப்படுவது ஒரு பிரச்சனையான விடயமாகும். தொழிலாளர் நகர்வு கருத்தில் கொள்ளப்படும் போது, அதிக வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்குகின்ற புவியியல் பிரதேசங்களுக்கு இடம் மாறுவது ஆண்களைவிட பெண்களுக்கு கஷ்டமானதாகும். உயர்ந்தளவிலான கல்வியியல் மூலம் பெண்கள் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் தொழில்பெற விரும்புகின்றனர். அத்தகைய தொழில் வாய்ப்புக்கள் கிராமத்துப் பெண்கள் வருமானத்தை அணுகமுடியாத நகர் பிரதேசங்களை மையங்களைப் பிரதானமாகக் கொண்டு வழங்கப்படுகிறது. தொழில் வழங்குதல் நோக்கிய பால்நிலைப் பாகுபாடுகளின் சில மட்டங்கள் மற்றும் தொழில்தருநர் பக்கங்களிலிருந்தான வருவாய்கள் போன்றவை தற்போதும் காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது (உலக வங்கி 2013). இது, பெண்கள் தொழிற்படைக்குள் ஈடுபடுவதனைத் தடுக்கிறது.

4. தலைக்குரிய வீட்டுத்துறை நுகர்வு செலவினால் அளவிடப்பட்டது

**முன்னோக்கிய பாதையில்**

கொள்கைப் கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கை நடவடிக்கை என்பன தொழிற்படைக்குள் அதிகமான பெண் அலுவலர்களை ஈடுபடுத்துவதற்காக மேலும் தாமதங்களின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமென இது சுட்டிக்காட்டுகின்றது. பகுதிநேர தொழில்களை வசதிப்படுத்துவதற்கு தொழிலாளர் சட்டங்களை தளர்த்துதல், நெகிழ்வு தன்மையான வேலை மணித்தியாலங்களை அறிமுகப்படுத்தல், வீட்டுத்தெரிவு மற்றும் சுயதொழில் ஆகியவற்றிலிருந்தான வேலைகளை பிரபல்யப்படுத்தல், சிறுவர் பராமரிப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறிய கால இடைவெளியின் பின்னர் தொழிற்படையில் இணைவதற்கு விருப்பமுள்ள பெண்களுக்கான மீள்திறனூட்டல் மற்றும் மீள பயிற்சியளித்தல் என்பன அதிகளவான பெண்களை அலுவலர் படைக்குள் பிரவேசிக்க தூண்டுகின்ற சில சாத்தியங்களாகும். பிரதான நகரங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருக்காது நிறுவனங்கள் தங்களது செயற்பாடுகளை பிராந்தியமயப்படுத்தலுக்கு ஊக்குவித்தலானது பெண்கள் தங்களின் வதிவிடப் பிரதேசங்களில் தொழில்வாய்ப்புக்களின் ஏற்பாடுகளூடாக தொழில் புரிவதற்கான இடையூறுகளைக் குறைக்கும். நீடித்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி பொருளாதார வளர்ச்சியில் பங்களித்திருப்பதனை உறுதி செய்வதற்காகவும் அதிகளவான பெண் அலுவலர்களை ஈடுபடுத்துதல் முக்கியமானதாகக் காணப்படும் வேளையில், வயதான குடித்தொகையின் சவால்களை நிவர்த்தி செய்தல், பெண்களின் கல்வி தொடர்பான தேசிய முதலீடுகளிலிருந்தான வருமானங்களைப் பெறல் அதேபோல் எழுந்துவரும் கைத்தொழில்கள் மூலமான தொழிலாளர் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் போன்றவற்றுக்காக பெண்களை வலுப்படுத்துதல் முக்கியமானதொன்றாகும்.

உசாத்துணைகள்


1. *Getting in and Staying in: Increasing women's labour force participation in Sri Lanka*, World Bank Group, (2013)
2. *Low Female Labor-Force Participation in Sri Lanka: Contributory Factors, Challenges and Policy Implications*, World Bank Group, (2013)
3. Premaratne, S.P.,(2011), *Household Labour Supply in Sri Lanka for Urban Young Couple with Pre-School Children*, South Asia Economic Journal, l2(2), 323-338
4. *Sri Lanka Demographic Transition Facing the Challenges of an Aging Population with Few Resources*, World Bank Group, (2012)
5. Teignier, M., and Cuberes, D.,(2014) *Aggregate Costs of Gender Gaps in the Labor Market: A Quantitative Estimate*, UB Economics Working Papers E14/308
6. De Silva, I., (2012) *The Age Structure Transition and the Demographic Dividend: An Opportunity for Rapid Economic Take-off in Sri Lanka*, Sri Lanka Journal of Advanced Social Studies, 2,1

**அரச துறை மற்றும் தனியார் துறை தொழில் வாய்ப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014இல் அதிகரித்தது.** இதன் விளைவாக, இத்தொழில்நிலை வகைகளின் பங்கு மற்றும் தொழிலுக்கமர்த்தப்பட்ட எண்ணிக்கை ஆகிய இரண்டும் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் தொழில் வாய்ப்புக்களின் கிடைக்கும் தன்மையால் ஏற்படுத்தப்பட்ட வேளையில் அரச மற்றும் தனியார் துறைகளின் வேளாண்மைத்துறை வீழ்ச்சியடைந்தது. எனினும், தொழில் தருநர்கள், சுயதொழில் செய்வோர் மற்றும் பணம் செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர் போன்றோரின் எண்ணிக்கை மற்றும் மொத்த தொழில்நிலையிலான பங்குகள் வீழ்ச்சிகளை பதிவு செய்தன. இவ்வீழ்ச்சிகள் பிரதானமாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலுள்ள தொழில்களில் அவதானிக்கப்பட்டன.

**இலங்கை மத்திய வங்கியால் நடத்தப்பட்ட பொதுத்துறை தொழில்நிலை அளவீட்டின்படி, பொதுத்துறைத் தொழில்நிலை 2013இன் 1,289,151 இலிருந்து 2014இல் 1,330,456 இற்கு 3.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ் அதிகரிப்பு பெரும்பாலும் அரச துறைக்கு தேறிய ஆட்சேர்ப்பிலான அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றிருந்தது. அதன்படி, பொதுத்துறைத் தொழில்நிலையிலான மொத்த அதிகரிப்பில் 84 சதவீதத்துக்கும் கூடுதலானவை அரசதுறையில் பதிவு செய்யப்பட்டதுடன் இது குறிப்பாக மாகாணசபைகளுக்கு அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேறிய ஆட்சேர்ப்புகளால் வழிநடத்தப்பட்டது. மாகாண சபைகள் மேற்கூறிய அதிகரிப்பின் ஏறத்தாழ 39 சதவீதத்துக்கும் பங்களிப்புச் செய்தன. மூன்றாம் நிலை மற்றும் முதனிலை மட்டங்களிலான நிரந்தர பதவியிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது. இதேவேளை, முப்படைகள், பொலிஸ் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பிலான தொழில்நிலை 6000இற்கும் மேற்பட்டளவில் அதிகரிக்கப்பட்டது.

அட்டவணை 4.11 தொழில்நிலைத் தகைமை (அ)

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர்கள் | சுயவேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப தொழிலாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2013 | 15.1 | 40.6 | 3.0 | 32.2 | 9.1 | 100.0 |
| **2014 (ஆ)** | **15.3** | **41.1** | **2.8** | **31.9** | **8.9** | **100.0** |
| 1 ஆம் காலாண்டு | 15.7 | 40.9 | 3.1 | 31.6 | 8.7 | 100.0 |
| 2 ஆம் காலாண்டு | 15.7 | 41.0 | 2.6 | 31.8 | 8.9 | 100.0 |
| 3 ஆம் காலாண்டு | 14.7 | 40.5 | 3.1 | 32.3 | 9.4 | 100.0 |
| 4 ஆம் காலாண்டு | 15.3 | 41.9 | 2.3 | 31.8 | 8.6 | 100.0 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்.
(ஆ) தற்காலிகமானது.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4.12 பொதுத் தொழில்நிலை

| துறை | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) | சதவீத மாற்றம் 2013/ 2012 (அ) | சதவீத மாற்றம் 2014/2013 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரசு (இ) | 993,912 | 1,033,850 | 1,068,773 | 4.0 | 3.4 |
| அரசுசார் (ஈ) | 254,728 | 255,301 | 261,683 | 0.2 | 2.5 |
| **பொதுத்துறை** | **1,248,640** | **1,289,151** | **1,330,456** | **3.2** | **3.2** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள் அரச அதிகார சபைகள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி


மொத்த பொதுத்துறை தொழில் நிலையில் 19.7 சதவீதத்துக்கும் வகைகூறிய பகுதியளவு அரசசார் துறையிலான தொழில்நிலை 2014இல் 2.5 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது. பகுதியளவான அரசசார் துறையில் இரண்டாம் மட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்தது.

## தொழிலின்மை

**2014இல் தொழிலின்மை வீதம் 2013இல் பதிவு செய்யப்பட்ட 4.4 சதவீதத்திலிருந்து 4.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளதை காலாண்டு தொழிற்படை அளவீடு வெளிப்படுத்தியது.** தொழிலின்மை வீதத்திலான இவ்வீழ்ச்சி, தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தமையாலும் பொருளாதாரத்தின் பல துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியால் தொழிலற்றோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையாலும் ஏற்பட்ட தொழில்நிலை உருவாக்கத்தால் ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 0.1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் தொழிலற்றோரின் எண்ணிக்கை 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெண்களின் தொழிலின்மை வீதம் 2013இன் 6.6 சதவீத்திலிருந்து 2014இன் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஆண்களின் தொழிலின்மை வீதம் 3.2 சதவீதத்தில் மாற்றமின்றி விளங்கியது.

**வயதுத் தொகுதி அடிப்படையில் 30 வயதுக்குக் குறைந்த வகைகளின் தொழிலின்மை வீதங்கள் 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் அதிகரித்தன.** இக்காலப்பகுதியில் 15-19 மற்றும் 20-24 வயதுத் தொகுதிகள் முறையே 21.5 சதவீதம் மற்றும் 20.0 சதவீதம் கொண்ட உயர் தொழிலின்மை வீதங்களைப் பதிவு செய்து நாட்டில் இளைஞர்களிடையே கூரிய உயர்மட்ட தொழிலின்மை வீதம் காணப்படுவதை குறித்துக் காட்டின. நாட்டில் இளைஞர்களிடையே உற்பத்தித்திறன்மிக்க தொழில் மணித்தியாலங்களின் குறைந்த பயன்பாடு இளைஞர்களிடையே சமூக அமைதியின்மை, மோசமான உற்பத்தித் திறன் இழப்புக்கள்

**வரைபடம் 4.2 தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்குகள் (2010-2014)**




குறிப்பு : 2011ஆம் ஆண்டில் நான்காவது காலாண்டுக்கும் 2012ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டுக்கும் உரிய காலாண்டு தொழிற்படை அளவீடானது தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் 2012இலிருந்தான தரவுகள் 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையை குறித்துக் காட்டுகிறது.

மற்றும் நாட்டில் நீண்ட கால தேர்ச்சிப் பற்றாக்குறைகளை ஏற்படுத்தி உலகளாவிய போக்குகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் மாற்றமுறும் பொருளாதாரத்துக்கான தேவைகளுக்கு பணியாற்ற முடியாத தொழிற்படைக்கு இட்டுச் செல்வதனால் இப்பிரச்சினை உடனடியானதும் ஆழமானதுமான கவனத்தை தேவைப்படுத்துகிறது. எனினும் 40 ஆண்டுகளும் அதற்கு மேற்பட்டதுமான வயதுத்தொகுதி தொழிலின்மை வீதங்களில் வீழ்ச்சியைப் பதிவு செய்தவேளையில் 30-39 வயதுத் தொகுதி இக்காலப்பகுதியில் மாற்றமின்றி விளங்கியது.

**கல்வி மட்டத்தின் அடிப்படையில் க.பொ.த (உ.த) மற்றும் இதற்குக் கூடுதலான தகைமையைக் கொண்ட வகையினரைத் தவிர அனைத்து வகைகளிலும் தொழிலின்மை வீதங்கள் மாற்றமின்றி விளங்கியது.** க.பொ.த (உ.த) மற்றும் இதற்குக் கூடுதலான தகைமையைக் கொண்ட வகையினரின் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 8.6 சதவீதத்திலிருந்து 2014இல் 8.1 சதவீதத்துக்கு முன்னேறியது. இக்காலப்பகுதியில் க.பொ.த (சா.த) தகைமையுடைய வகையினரிடையேயான தொழிலின்மை வீதம் 5.9 சதவீதமாக விளங்கிய வேளையில் 6-10 ஆண்டுகளை பூர்த்தி செய்தவர்கள் மிகக்குறைந்த தொழிலின்மை வீதமான 3.4 சதவீதத்தைப் பதிவு செய்தனர். குறைந்த கல்வித் தகைமையுடையோரை விட உயர்கல்வி தகைமையுடையோர் தொழில் பெறுவது கடினம் என்பதை இத்தொழிலின்மை வீதங்கள் வெளிப்படுத்துகின்றன. இது உயர் கல்வித் தகைமையுடையோருக்கு கல்வி மீது செலவிடப்படும் அரச நிதியங்கள் எதிர்பார்க்கப்பட்ட வெளிப்பாட்டை உருவாக்கவில்லை என்பதை மேலும் எடுத்துக்காட்டுகிறது. இப்பிரச்சினைக்கான முக்கிய காரணம் தேர்ச்சி மற்றும் அறிவு உணர்ச்சி பொருத்தப்பாட்டின்மை பல தொழில்தருநர்களால் இனங்காணப்பட்டுள்ளது. உற்பத்தியை மட்டும் உருவாக்காது பொருளாதாரத்துக்கு உற்பத்தித்திறனைப் பங்களிக்கும் பொருத்தமான தேர்ச்சிகள், நம்பகத்தன்மை மற்றும் மனப்பாங்குடன் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட தொழிற்படையை உருவாக்குவதன் மூலம் இது தரமான வெளிப்பாடுகளையும் உருவாக்குகிறது.

## வெளிநாட்டுத் தொழில்நிலை

**2014இல், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான வெளிச் செல்லல்களின் மொத்த எண்ணிக்கை கடந்த காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட அதன் அதிகரிக்கும் போக்கைத் தொடர்ந்தது.** இதன்படி 2014இல் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான மொத்த வெளிச்செல்லல்கள் 2013இன் 293,218 இலிருந்து 300,413 இற்கு 2.5 சதவீதத்தால் அதிகரித்தன. இது ஆண் புலம்பெயர்வோரிலான அதிகரிப்பால்

**அட்டவணை 4.13 தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்) (அ)**

| வகை | 2013 | 2014 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கா.1 | கா.2 | கா.3 | கா.4 | ஆண்டுக்கான |
| அனைத்து | 4.4 | 4.1 | 4.5 | 4.2 | 4.4 | 4.3 |
| பால் வகைப்படி | | | | | | |
| ஆண் | 3.2 | 3.0 | 3.4 | 3.3 | 2.9 | 3.2 |
| பெண் | 6.6 | 6.1 | 6.7 | 6.0 | 7.2 | 6.5 |
| கல்விமட்ட அடிப்படையில் | | | | | | |
| வகுப்பு 4/ஆண்டு 5 மற்றும் அதற்கு கீழ் | ... | ... | ... | ... | ... | ... |
| வகுப்பு 5-9/ஆண்டு 6-10 | 3.4 | 3.1 | 3.6 | 3.8 | 3.0 | 3.4 |
| கா.பொ.த (சா/த) | 5.9 | 6.6 | 5.8 | 5.1 | 6.2 | 5.9 |
| கா.பொ.த (உ/த) மற்றும் அதற்கு மேல் | 8.6 | 6.9 | 8.7 | 7.9 | 8.8 | 8.1 |
| வயது அடிப்படையில் | | | | | | |
| 15-19 | 18.7 | 21.1 | 21.8 | 20.2 | 22.8 | 21.5 |
| 20-24 | 19.2 | 19.1 | 18.8 | 20.8 | 21.2 | 20.0 |
| 25-29 | 7.5 | 8.6 | 9.4 | 8.1 | 6.9 | 8.3 |
| 30-39 | 2.7 | 2.4 | 3.1 | 2.3 | 2.9 | 2.7 |
| 40 உம் அதற்கு மேலும் | 1.0 | 0.9 | 0.9 | 1.0 | 0.9 | 0.9 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை மற்றும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய தரவுகள்
(ஆ) தற்காலிகமானது.

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மட்டும் ஏற்பட்டது. 2014இல் ஆண் வெளிச்செல்லல்கள் 14,739 ஆல் அதிகரித்து பெண் வெளிச்செல்லல்களில் பதிவு செய்யப்பட்ட 7,544ஐக் கொண்ட மொத்த வீழ்ச்சியை விஞ்சியது. இதன் விளைவாக, 2014இல் வெளிநாட்டுத் தொழில் நிலைக்கான மொத்த வெளிச்செல்லல்களில் ஆண்களின் பங்கு முன்னைய ஆண்டின் 59.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 63.2 சதவீதத்துக்கு அதிகரித்ததுடன் தொழில்நுட்ப தேர்ச்சிகளின் அபிவிருத்தியை வசதிப்படுத்துவதனூடாக தேர்ச்சி பெற்ற ஆண் தொழிலாளர்களின் வெளிச் செல்லல்களை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல கொள்கை வழிமுறைகளின் பயனுறுதியைப் பிரதிபலிக்கிறது. இப்போக்கு ஆண் புலம்பெயர்வோரின் அனைத்து வயதுத் தொகுதிகளிலும் தெளிவாக அவதானிக்க முடிகிறது. அதேவேளை, 45 - 49 ஆண்டுகள், மற்றும் 50 ஆண்டுகளும் அதற்குக் கூடுதலான தொகுதியினரை தவிர பெண் வெளிச்செல்லல்களின் ஒவ்வொரு தொகுதியும் எண்தொகையில் வீழ்ச்சிகளைக் காட்டின.

**தேர்ச்சியின் அடிப்படையிலான புலம்பெயர் தொழில் நிலையின் நியதிகளில், 2014இல் தொழில்சார், மத்திய தரம், எழுதுவினைஞர் தொடர்பான வேலைகள், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் தொழில் வகைகளில் அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டன.** அதேவேளை, 2014இல் பணிப்பெண்கள் வகை 8.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த 8,239 வெளிச்செல்லல்கள் கொண்ட ஆகக் குறைந்த வீழ்ச்சியையும் அதைத் தொடர்ந்து தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் வகை வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 2014இல் மொத்த புலம்பெயர்வோரில் 80 சதவீதத்துக்கும் கூடுதலானோர் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் மற்றும் பணிப்பெண்களாக விளங்கினர். இது தொழில்சார் மற்றும் தேர்ச்சி பெற்ற வகைகளின் கீழ் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் புலம்பெயர்வை மேம்படுத்தும் அதேவேளையில் பணிப்பெண்கள் மற்றும் தேர்ச்சியற்ற வகைகளின் கீழான வெளிச்செல்லல்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கான வழிமுறைகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது.

**மத்திய கிழக்கு நாடுகளுக்கான மொத்த வெளிச்செல்லல்கள் 2014இல் 279,952 இற்கு 1.7 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது.** குறிப்பாக எழுதுவினைஞர் மத்திய தர மற்றும் தேர்ச்சி பெறாத வகைளுக்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆண் புலம்பெயர்வோர் 62.3 சதவீதம் கொண்ட அதிகரித்த ஆண்களின் பங்குடன் பாராட்டத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. இது கட்டாரிலிருந்து ஆண் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வியால் ஏற்பட்டது. இதற்கு முரணாக, வீழ்ச்சியடைந்து செல்லும் அண்மைய போக்கைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்த பணிப்பெண்களின் எண்ணிக்கை குடும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டாயத் தேவைப்பாடுகள் காரணமாக 2014இல் மேலும் 8,148 ஆல் வீழ்ச்சியடைந்தது. இது உரிய கவனிப்பின்றி பெண் புலம்பெயர்வோரின் பிள்ளைகள் தனியாக விட்டுச் செல்வதால் ஏற்படும் மனோதத்துவ - சமூகச் செலவைக் குறைக்கும் குறிக்கோளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வீழ்ச்சி சவுதி அரேபியா, குவைத் மற்றும் கட்டார் போன்ற நாடுகளுக்கான வெளிச்செல்லல்களில் தெளிவாக அவதானிக்கப்பட்டது. மாறாக சவுதி அரேபியாவுக்கான தேர்ச்சியற்ற தொழில் நிலை வகைக்கான பெண்களின் வெளிச் செல்லல்களில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய அபிவிருத்திகளின் விளைவாக, பணிப்பெண்கள் நீங்கலான மொத்த வெளிச்செல்லல்கள் 8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்தது.

அட்டவணை 4.14 வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக சென்றோர்

| தொழில்நிலை | 2012 | | 2013(அ) | | 2014 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **மொத்த தொழிலிலுள்ளோர்** | **282,447** | **100.0** | **293,218** | **100.0** | **300,413** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 175,169 | 62.0 | 180,463 | 61.6 | 177,012 | 58.9 |
| ஏனையோர் | 107,278 | 38.0 | 112,755 | 38.4 | 123,401 | 41.1 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண்கள் | 144,135 | 51.0 | 175,185 | 59.7 | 189,924 | 63.2 |
| பெண்கள் | 138,312 | 49.0 | 118,033 | 40.3 | 110,489 | 36.8 |
| **மனிதவலு வகையின் படி** | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 4,448 | 1.6 | 5,151 | 1.8 | 5,340 | 1.8 |
| நடுத்தர மட்டம் | 9,280 | 3.3 | 16,510 | 5.6 | 20,749 | 6.9 |
| எழுத்துவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 16,184 | 5.7 | 26,561 | 9.1 | 29,237 | 9.7 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 67,150 | 23.8 | 73,707 | 25.1 | 73,039 | 24.3 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 3,467 | 1.2 | 3,412 | 1.2 | 3,972 | 1.3 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 62,907 | 22.3 | 70,977 | 24.2 | 79,415 | 26.4 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 119,011 | 42.1 | 96,900 | 33.0 | 88,661 | 29.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

அட்டவணை 4.15 நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்

| நாடு | 2013(அ) | | 2014 (ஆ) | | மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| சவுதி அரேபியா | 80,887 | 27.6 | 80,539 | 26.8 | -348 | -0.4 |
| கட்டார் | 80,724 | 27.5 | 84,571 | 28.2 | 3,847 | 4.8 |
| குவைத் | 27,027 | 9.2 | 25,896 | 8.6 | -1,131 | -4.2 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 48,502 | 16.6 | 50,192 | 16.7 | 1,690 | 3.5 |
| ஏனையவை | 56,078 | 19.1 | 59,215 | 19.7 | 3,137 | 5.6 |
| **மொத்தம்** | **293,218** | **100.0** | **300,413** | **100.0** | **7,195** | **2.5** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் 2014இல் 101 புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு உரிமங்களை வழங்கியதுடன் ஏற்கனவேயுள்ள 998 உரிமங்களை புதுப்பித்தது.** இருப்பினும் உரிமம் பெற்ற முகவர்களூடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வெளிச்செல்லல்களின் பங்கு முன்னைய ஆண்டின் 61.6 சதவீதத்திலிருந்து 2014இல் 58.9 சதவீதத்துக்கான வீழ்ச்சியை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகப் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டியது. இதன்படி, ஏனைய மூலகங்களூடாக ஒழுங்கு செய்யப்பட்ட வெளிச்செல்லல்களின் பங்கு 2014இல் அதிகரித்தது.

**இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் கௌரவம், பாதுகாப்பு மற்றும் சம அந்தஸ்தை ஒழுங்குமுறைப்படுத்தி உறுதிப்படுத்துவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.** இதன்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களை ஊக்கவிப்பதற்கு அனுமதிப்பங்கு முறைமை இரத்துச் செய்திருக்கையில், நல்லாட்சியின் ஆளுமையின் அபிவிருத்தி செய்தல் மற்றும் புலம்பெயர் செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்தல் என்ற தொனிப்பொருளின் கீழ் வேலைவாய்ப்பு முகவர்களுக்கான தரமிடும் முறைமை 2014இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆட்சேர்ப்பு செயல்முறைமையின் வினைத்திறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன் வெப்பை அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்ப்பு முறைமை அதன் பரப்பெல்லையை கூடிய நாடுகளுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டது. புலம்பெயர் ஊழியர்களின் நலன்புரி பாதுகாப்பு மற்றும் இப்பிராந்தியத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்தும் குறிக்கோள்களுடன் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 2014இல் நாட்டவிரு பியச வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டத்துக்கு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் கவர்ச்சிகரமான அதிகரிப்பு காணப்பட்டது.

## தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழில் சந்தை சீர்திருத்தங்கள்

**தனி-யார் துறையில் வேலைநிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கை வேலை நிறுத்தங்களில் பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வேலைநிறுத்தங்கள் காரணமாக இழக்கப்பட்ட மொத்த மனித நாட்கள் 2013உடன் ஒப்பிடுகையில் 2014இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.** இவ்வாண்டில் பெருந்தோட்டத்துறையில் இடம்பெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் ஏனைய துறைகளில் பதிவு செய்யப்பட் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2014இல் வீழ்ச்சியடைந்தது. இதன் பெறுபேறாக, தனியார் துறைக் கைத்தொழில்களில் இடம்பெற்ற மொத்த வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2013இன் 42 இலிருந்து 2014இல் 38இற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும் இவ்வேலை நிறுத்தங்களில் அநேகமானவை அடையாள வேலைநிறுத்தங்களாக விளங்கியதுடன் இவை தொடர்பான முகாமைத்துவத்துடனான குறுகிய கால உடன்பாடின்மையால் ஏற்பட்டது. ஆகையால் ஏற்பட்ட பாதகமான தாக்கம் குறைவாக இருந்தது. இதேவேளை, தனியார்துறையில் வேலை நிறுத்தங்களில் பங்கேற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் 42.0 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இது 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் தனியார் துறைக் கைத்தொழில்களில் இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கையை 53.6 சதவீதத்தால் குறைக்க வழியமைத்தது. எனினும், பெருந்தோட்டத் துறைக் கைத்தொழில்களிலான இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை ஏனைய துறைகளை விட உயர்வாகக் காணப்பட்டது.

**கைத்தொழில் ஒற்றுமையை அதிகரிக்கும் பொருட்டு 2014இல் தொழில் திணைக்களத்தால் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இதன்படி, திணைக்களமானது மாவட்ட அலுவலகங்களின் ஊடாக வேலைத்தளத்தில் ஒத்துழைப்பு மற்றும் கைத்தொழில் சமூக நிலையை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டது.

**அட்டவணை 4.16 தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்**

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2011 | 19 | 7,232 | 23,513 | 8 | 3,807 | 15,673 | 27 | 11,039 | 39,186 |
| 2012 | 14 | 4,278 | 25,043 | 20 | 5,626 | 10,774 | 34 | 9,904 | 35,817 |
| **2013** | **21** | **5,031** | **41,669** | **21** | **6,088** | **38,754** | **42** | **11,119** | **80,423** |
| 1ஆம் காலாண்டு | 4 | 416 | 1,046 | 7 | 2,505 | 21,381 | 11 | 2,921 | 22,427 |
| 2ஆம் காலாண்டு | 7 | 2,436 | 29,112 | 5 | 1,893 | 7,537 | 12 | 4,329 | 36,649 |
| 3ஆம் காலாண்டு | 5 | 1,490 | 9,134 | 2 | 498 | 3,208 | 7 | 1,988 | 12,342 |
| 4ஆம் காலாண்டு | 5 | 689 | 2,377 | 7 | 1,192 | 6,628 | 12 | 1,881 | 9,005 |
| **2014 (ஆ)** | **31** | **4,833** | **29,165** | **7** | **1,618** | **8,158** | **38** | **6,451** | **37,323** |
| 1ஆம் காலாண்டு | 12 | 1,582 | 3,831 | - | - | - | 12 | 1,582 | 3,831 |
| 2ஆம் காலாண்டு | 9 | 1,121 | 5,275 | 4 | 1,360 | 6,712 | 13 | 2,481 | 11,987 |
| 3ஆம் காலாண்டு | 5 | 830 | 8,820 | 2 | 128 | 1,186 | 7 | 958 | 10,006 |
| 4ஆம் காலாண்டு | 5 | 1,300 | 11,239 | 1 | 130 | 260 | 6 | 1,430 | 11,499 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொழில் திணைக்களம்

அவர்களின் கிரமமான வருகைகளுக்கு மேலதிகமாக கூடிய பிணக்குகளைப் பதிவு செய்த நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஊழியர்களுக்குத் தனியாகவும், ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவம் இரண்டுக்கும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**வேலை செய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றுக்கான மொ.உ.உற்பத்தியில் (2002 விலைகளில்) அளவிடப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறன்[4] 2013இன் மணித்தியாலத்துக்கான ரூ.181.51 உடன் ஒப்பிடுகையில் 2014இன் மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.192.55 இற்கு 6.1 சதவீதத்தால் அதிகரித்தது.** இவ் அதிகரிப்பு பொருளாதாரத்தின் அனைத்து மூன்று துறைகளிலும் அடையப்பட்டது. 8.7 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய தொழிலாளர் உற்பத்தித்திறன் கைத்தொழில் துறையில் அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டில் வேளாண்மைத்துறை உற்பத்தித்திறனில் 4.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் பணிகள் துறை சார்புரீதியில் 3.4 சதவீதம் கொண்ட குறைந்த உற்பத்தித்திறன் வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**வேளாண்மை துறை ஆகக்கூடிய தொழிலாளர் உற்பத்தித்திறனை பதிவு செய்த போதிலும் கைத்தொழில் மற்றும் பணிகள் துறையுடன் ஒப்பிடுகையில் இத்துறையிலான தொழிலாளர் உற்பத்தித்திறனின் மட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டது.** வேளாண்மை துறையில் வேலை செய்த மணித்தியாலம் ஒன்றுக்கான வெளியீடு மற்றைய இரு துறைகளால் பதிவு செய்யப்பட்டதிலும் அரைவாசியை விட குறைவாகக் காணப்பட்டதோடு இத்துறை உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நியதிகளில் மேலதிக கவனம் செலுத்த வேண்டியதை எடுத்துக்காட்டுகிறது. நாட்டில் கிட்டத்தட்ட 28 சதவீத தொழிலாளர்கள் இத்துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளதுடன், நாட்டின் மொத்த வெளியீட்டில் 10 சதவீதத்துக்கு மட்டும் பங்களிப்புச் செய்து வருமானப் பகிர்ந்தளிப்பு மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி நியதிகளில் ஏற்றத்தாழ்வுக்கு இட்டுச் செல்கின்றதனால் இது மேலும் முக்கியத்துவமானதாகும். ஏனைய இரண்டு துறைகளை விடவும் வேளாண்மைத் துறையிலுள்ள தொழிலாளர்கள் உபயோகமற்ற வேலை மணித்தியாலங்களுடன் இருப்பதும் புலனாகிறது. இப்போக்கு மோசமான காலநிலைமையின் காரணமாக பயிர்ச்சேதங்கள் ஏற்பட்ட காலப்பகுதிகளில் பெரும்பாலும் அவதானிக்கப்பட்டது. தேசிய வெளியீட்டை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அத்தகைய உபயோகமற்ற வேலை மணித்தியாலங்களைப்

**அட்டவணை 4.17 முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்**

| | 2013 | 2014 (அ) |
|---|---|---|
| நிலையான விலைகளில் (2002) மொ.உ.உ ரூ.மில்லியன் | **3,266,041** | **3,506,664** |
| வேளாண்மை | 352,583 | 353,709 |
| கைத்தொழில் | 1,016,886 | 1,132,892 |
| பணிகள் | 1,896,572 | 2,019,973 |
| தொழிலாளர் உற்பத்தியாக்கம் ரூ. தொழில் செய்த மணித்தியாலத்துக்கு | **181.51** | **192.55** |
| வேளாண்மை | 79.97 | 83.33 |
| கைத்தொழில் | 214.70 | 233.28 |
| பணிகள் | 214.42 | 221.71 |

(அ) தற்காலிகமானது
(ஆ) தரவு எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

4. 2013 வரை தொழிலாளர் உற்பத்தித்திறன் உள்ளீட்டு அளவாக மொத்தத் தொழில் நிலையையும் வெளியீட்டு அளவாக மொ.உ.உற்பத்தியையும் பயன்படுத்தி கணிக்கப்பட்டது. பன்னாட்டு வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் 2014 இலிருந்து தொழிலாளர் உள்ளீட்டு அளவாக வேலை செய்த மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டது.

பயன்படுத்துவதற்கு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். நோய் மற்றும் காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய பயிர் வகைகளை மேம்படுத்தல் மற்றும் முன்னேற்றமடைந்த நடுகை முறைகள் வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிக்கும். வேளாண்மைத் துறையிலுள்ள தொழிலாளர்களை உபயோகமற்ற காலப்பகுதிகளில் ஏனைய துறைகளில் தொழில்நிலையில் ஈடுபடுத்துவதற்கு அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

**ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழில்துறை அனைத்து மூன்று துறைகளிடையே தொழிலாளர் உற்பத்தித் திறன் ஆகக்கூடிய மட்டத்தைப் பதிவு செய்தது.** பணிகள் துறையும் மிதமான தொழிலாளர் உற்பத்தித்திறன் மட்டத்தை பதிவு செய்தபோதிலும் குறைவான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் தற்போது பொருளாதாரத்தில் புதிய தொழிலாளர்களின் பெரும்பாலோரை ஈர்த்துக் கொள்வதால் இத்துறைகளில் உற்பத்தித்திறனிலான வளர்ச்சி தற்காலிகமாக பாதிக்கப்படலாம். தொழிலாளர் பயன்பாட்டு நிதியங்களிலான சிறந்த நடைமுறைகளுடன் இணைந்து அதிகரித்த இயந்திரமயப்படுத்தல் மற்றும் உயர்மட்டத்தில் தொழில்நுட்பத்தைப் பின்பற்றல் இப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க உதவும். அத்தகைய முன்னெடுப்புகள் பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி நீண்டகால தொலை நோக்கில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**தனியார் துறையில் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு உதவுவதற்கு அரச துறையிலான உற்பத்தித்திறனை மேம்படுத்த வேண்டியதுடன் நிருவாக செயல்முறைகளிடையேயான பணிகளின் சுமுகமான மாற்றலை வசதிப்படுத்தல் வேண்டும்.** நிர்வாகச் செயல்முறைகளிலான தடைகள் தனியார் துறையின் செயலாக்கத்தை ஊக்கமிழக்கச் செய்கின்றன. நன்கு தொழிற்படும் அரசபணி முழுப் பொருளாதாரத்தின் போட்டித்தன்மைக்கு இட்டுச் சென்று சிறந்த நடைமுறை உதாரணங்களை நிர்ணயிக்கும் அதேவேளை அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித்திறன் வளர்ச்சியை வசதிப்படுத்துகிறது. ஆகையால், நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வாக செயல்முறைகளை மீள ஒழுங்குமுறைப்படுத்தல், மற்றும் அரசதுறையின் பணி வழங்கலின் வினைத்திறனை மேம்படுத்தல் என்பன பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கு மிகவும் முக்கியமானதாகும்.